# நேசரின் ஒளி

# Nesarin Oli


| மலர் 5 | இதழ் 12 | இலவசப்பிரதி | அக்டோபர் 2018 |
| --- | --- | --- | --- |
| Malar 5 | Issue 12 | Free Distribution | October 2018 |


**அந்நாளில் உன் தோளினின்று அவன் சுமையும் உன் கழுத்தினின்று அவன் நுகமும் நீக்கப்படும் அபிஷேகத்தினால் நுகம் முறிந்துபோம்.**

(ஏசா 10:27)




**Rev. V.** இஸ்ரவேல் தேவதாசன்

# முகவுரை

## அக்டோபர் மாதத்தின் வாக்குத்தத்தம்

"அந்நாளில் உன் தோளினின்று அவன் சுமையும், உன் கழுத்தினின்று அவன் நுகமும் நீக்கப்படும்; அபிஷேகத்தினால் நுகம் முறிந்துபோம்." (ஏசா 10:27)

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே! பிதாவாகிய தேவனுடைய நாமத்தினாலும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலும் நம்மை என்றென்றும் வழிநடத்தும் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியின் நாமத்தினாலும் இந்த மாத பத்திரிக்கையின் மூலம் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். பத்திரிக்கைக்காக ஜெபித்த, உழைத்த பிள்ளைகளை தேவன் கோடான கோடி ஆசீர்வதிப்பார். இதை வாசிக்கும் பிள்ளைகளுக்கு சமாதானம், சந்தோஷம், இரட்சிப்பு உண்டாக வேண்டுமென்று தேவனை வேண்டிக்கொள்கிறேன்.

ஜெபத்தினால் இந்த ஊழியத்தை செய்ய கிருபை பாராட்டியிருக்கிறார். அநேக சாட்சிகளையும் எழுப்பி தந்திருக்கிறார். அதற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். விசேஷமாக சிறுவர் ஊழியம், ஊத்துக்குளி, குறிஞ்சிநகர், கொளத்தூர், பெரியார் நகர், திருச்செந்தூர் - மெய்ஞானபுரம் ஊழியம், வாலிபர் ஐக்கியம், பெண்கள் ஐக்கியத்திற்காகவும் அதிகமாக ஜெபியுங்கள். 24 மணி நேர ஜெப ஊழியத்திற்காகவும் சபையில் ஒரு மனம் உண்டாகவும் ஊக்கமாக ஜெபியுங்கள்.

செப்டம்பர் மாதம் 23ம் தேதி நடைபெற்ற ஆலய பிரதிஷ்டை ஆராதனைக்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். கடந்த (19) வருடங்களாக நம்முடைய ஜெபத்தை அங்கீகரித்து, இந்த ஆலயத்தில் வாசம் பண்ணி இங்கு பாரத்தோடும், போராட்டத்தோடும், நோய்களோடும், பிரச்சனைகளோடும் வந்த ஜனங்களை பிசாசின் கட்டிலிருந்து விடுதலை கொடுத்து, இன்றும் எங்களோடு வாசம் செய்து, அநேக ஜனங்களுக்கு தகப்பனாக அங்கீகரித்து ஆசீர்வதித்து வழிநடத்துகிற தேவனை கோடான கோடி நன்றி பலிகளோடு ஸ்தோத்தரிக்கிறேன். அடியேனுக்கு தேவன் பாராட்டின இந்த கிருபைக்காக ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறேன். இந்த ஆலய பிரதிஷ்டை ஆராதனையில் சிறுவர்கள் அனைவரும் தேவனை ஸ்தோத்தரித்து பாடல்கள் பாடி தேவனை மகிமைப்படுத்தினார்கள். நாமும் அநேக ஆத்துமாக்கள் வரவும், சபை இன்னும் வளர்ச்சியடையவும் அதிகதிகமாக ஜெபிப்போம்.

கிராம ஊழியங்களுக்கு செல்லும் எல்லாருக்காகவும் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். தேவன் அவர்களை எல்லாவிதமான கிருபை வரங்களினால் நிறைத்து, தடையில்லாமல் தொடர்ந்து ஊழியம் செய்யவும், அவர்கள் மூலமாய் ஆத்துமாக்கள் உண்டாகவும், தேவன் அவர்களை கனி கொடுக்கிறவர்களாய் மாற்றவும் ஜெபிக்கிறேன். தேவன் நமக்கு தந்தருளின எல்லா ஊழியங்களுக்காக ஜெபியுங்கள். கட்டப்பட்டுள்ள மக்கள் விடுதலை பெறவும், பிரிந்திருக்கும் குடும்பங்கள் ஒன்று சேரவும், கடன் பிரச்சனையில் உள்ளவர்களுக்காகவும், கேன்சர், எய்ட்ஸ், கிட்னி பிரச்சனை மற்றும் பல விதமான வியாதிகள் உள்ளவர்களுக்ககாகவும், திக்கற்றவர்கள், ஆதரவற்றவர்கள், கைம்பெண்கள், முதியவர்களுக்காகவும் விசேஷமாக வாலிபர்கள் தகாத வழியில் செல்லாதபடிக்கும், ஊழியர்களுக்கு விரோதமாய் எழும்புகிறவர்களை கர்த்தர் தொடும்படியாகவும் கண்ணீரோடு ஜெபிப்போம்.

தேசத்தில் சமாதானம் உண்டாயிருக்கவும், நல்ல தலைவர்கள் ஆட்சி செய்யவும், அவர்கள் கிறிஸ்துவுக்குள்ளாக செயல்படவும், அதிகமாக ஜெபிப்போம். ஜெயமோ கர்த்தரால் வரும்.

உங்களுக்காக என்றும் ஜெபிக்கும்
**Rev.V.இஸ்ரவேல் தேவதாசன்**




ஆசிரியர்
Rev. V. இஸ்ரவேல் தேவதாசன்
Publisher & Editor

சிறப்பு இலவசப்பிரதி

அடிச்சிட்டோர்
அன்பு அச்சகம்

**நோக்கம்**
பாவம் செய்து நரகத்திற்கு போகும் ஜனங்களைத் தடுத்து தேவ ராஜ்யத்திற்கு செல்ல அவர்களை ஆயத்தம் செய்வது

**முகவரி**
ஆத்ம நேசர் ஜெப ஐக்கியம்
எண் 2 -106, அகரம் மெயின் ரோடு,
அகரம் தென், சேலையூர்,
சென்னை - 600 073.
தொடர்புக்கு
044 - 2228 4058 / 2689
94440 30053 / 94440 30503

# உன் நுகத்தடியை மாற்றுவேன்




எனக்கு அன்பான தேவ பிள்ளைகளே! இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இந்த மாதத்திலும், இந்தச் செய்தியை உங்களுக்கு கொடுக்கும் படியாகத் தேவன் கொடுத்த பெரிதான கிருபைக்காக நன்றி செலுத்துகிறேன். கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாய் இருங்கள் என்று வேதம் சொல்லுகிறது, அதே சமயத்தில் வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றும் வேதம் சொல்லுகிறது. சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று விரும்பினால் ஏதோ ஒரு கவலை நம்மைச் சூழ்ந்து கொண்டிருப்பதை அறியலாம். அந்தக் கவலை, பிரச்சனை, சோதனை, நாம் அன்றாட வாழ்க்கையில் அனுபவிக்கும் பாடுகள் இவைகள் தாம் நம்மை வருத்தப்படுத்தும் நுகம் ஆகும். வீட்டுக்கு வீடு வாசற்படி என்பதைப் போல ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் இந்த நுகத்தை சுமக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது.

இயேசு கிறிஸ்து நமக்குக் கொடுத்த கற்பனைகளைக் கைக்கொள்வதற்குச் சில சமயங்களில் நமக்குக் கடினமாகத்தான் இருக்கும் ஆனால் அவர் "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார். (மத் 11:29,30). ஆம், தேவன் நம்மேல் வைக்கும் நுகம் இலகுவானதுதான். அவரிடம் கேட்டு, கற்றுக் கொண்டு அதன்படி நடக்கிறவர்களுக்கு மிகவும் இலகுவாக இருக்கும். ஏர் மாடுகளை வண்டியில் பூட்டப் படும் போது அது அவைகளுக்கு நுகமாக அமையும். தன் எஜமானின்

## உள்ளே

1 . தேவ செய்தி
6 . சபை ஆராதனை ஒழுங்குகள்
7 . சாட்சிகள்
10 . ஹாய் குட்டிஸ்
12 . சமையல்
13 . இயேசுவின் இரத்தம்
17 . தியாகச் செம்மல்
21 . மருத்துவம்
22 . The Power of Blessing
24 . யோசபாத்
25 . Jesus redeems You
29 . யூத் ஸ்பெஷல்
32 . வேத வாசிப்பு பகுதி

சந்தோஷத்தை நிறைவு செய்வதற்கு அது தன் மேல் வைக்கப்பட்ட நுகத்தை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளுகிறது, இஸ்ரவேல் ஜனங்கள் 400 ஆண்டுகள் எகிப்தியருக்கு அடிமைகளாக இருந்தார்கள். இந்த அடிமைத்தனம் அவர்கள் மேல் வைக்கப்பட்ட நுகமாகும் இந்த நுகம் நமக்கு எப்படி வருகிறதென்றால் பாவத்தினாலும், வியாதியினாலும், சாபத்தினாலும் வருகிறதென்று வேதம் கூறுகிறது.

## பாவத்தினால் வரும் நுகத்தடி:-

**தீய நோக்கம் பாவமாம் (நீதி 24:9)**. தீய நோக்கத்தினால் (பார்வையினால்) தீய சிந்தனை வருகிறது தீய சிந்தனையினால் தீய வார்த்தைகள் வெளிப்படுகின்றன. தீய சிந்தனையினால் பொறுமையை இழந்து விட வேண்டிய சூழ்நிலை வந்து விடுகிறது. சொற்களின் மிகுதியால் பாவம் இல்லாமல் போகாது என்று வேதம் சொல்லுகிறது பாவம் செய்யும் போது மனச் சமாதானத்தை இழந்து விடுகிறோம். பாவம் செய்யும் போது பிறரால் இகழப்படுகிறோம். பாவமானது வாசற்படியில் படுத்திருக்கும். பாம்பைப் போல் கடிக்கும். நம்மைத் தொடர்ந்து பிடிக்கும். பாவம் செய்கிறவன் பிறருடைய மேன்மையை விரும்பமாட்டான். ஆகையால் அவர்களுக்கு விரோதமாகச் செயல்பட ஆரம்பிப்பான். பிறருக்கு ஒரு தீமை செய்ய முற்படும் பொழுது அந்தத் தீமையில் அவனே விழுந்து விடுவான். அதாவது தான் வெட்டிய குழியே தனக்கு ஒரு பாரமாக, நுகமாக அமைந்து விடும். பாவம் செய்கிற ஆத்துமா வாழ்வடையாது. அந்தப் பாவம் நிழல் போல் அவனைப் பின் தொடர்ந்து கொண்டிருக்கும். மட்டுமல்ல பாவத்தின் சம்பளம் மரணம் என்ற வேத வசனத்தின் படி பாவம் செய்கிறவன் மரணத்தையே சந்திக்க வேண்டியதிருக்கும்.

நாவு சிறிய அவயவமாக இருந்தாலும் பெரிய காட்டையே கொளுத்தும் தன்மையுடையது, நம்முடைய ஆத்துமாவையே கொல்லும் தன்மையுடையது, ஆகையால் நாம் நம்முடைய அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும். நாம் தேவ கிருபைக்குக் கீழ்ப்பட்டிருந்தால் பாவம் நம்மை மேற்கொள்ளாது. பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு தேவனுக்கு அடிமைகளானால் பரிசுத்தத்தைக் காத்துக் கொள்ளலாம். அதனால் கிடைக்கும் பலனும் முடிவும் நித்திய ஜீவனாகும்.

இப்படியாக அன்புப் பிள்ளைகளே! விழுந்து போன பிசாசின் தந்திரங்களுக்கு விலகி ஓடுங்கள். பிசாசுக்கு இடங்கொடாதிருங்கள். அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான் பிசாசு நாய் போன்றவன். குரைக்கிற நாய் கடிக்காது. நாய் நம்மைத் துரத்தினால் ஓடக் கூடாது. ஓட ஆரம்பித்தால் இன்னும் துரத்தும். நின்று அதனை எதிர்த்தால் அது உங்களைப் பார்த்து பயந்து ஓடி விடும். தனக்குக் கொஞ்சங்காலம் மட்டும் உண்டு என்று கிரியை செய்கிற பிசாசுக்கு அடிமையாகாமல் அதன் நுகத்திலிருந்து விடுபட முயற்சி செய்யுங்கள்.

## வியாதியினால் வரும் நுகத்தடி:-

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். சுவர் இருந்தால்தானே சித்திரம் வரைய முடியும். நோய் மிகவும் பொல்லாதது. நோய் கொண்டவன் நிம்மதியற்றவன். வியாதிப் பட்டவனால் வேலை செய்ய முடியாது. தனது கடமைகளைத் தானாகச் செய்ய முடியாது. பிறரைச் சார்ந்து வாழ வேண்டும். வியாதி நமக்கு நுகமாக அமையும் போது நாம் பிறருக்கு நுகமாக அதாவது பாரமாக மாறி விடுவோம். இந்த நுகத்தடியை நீக்குகிறவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர் மட்டுமே. பார்வோனின் இருதயக் கடினத்தினிமித்தம் எகிப்தியர் வாதை

என்னும் நுகத்தைச் சுமந்தனர். பதினெட்டு வருடமாக சாத்தானால் கட்டப்பட்டிருந்த கூனியின் நுகத்தடியைக் கர்த்தர் கட்டவிழ்த்தார். அன்பு மகனே! நீ தீராத வியாதியினால் கட்டப்பட்டிருக்கின்றாயா? இயேசுவைத் தேடி ஒடி வா. விடுதலையைப் பெற்றுக்கொள்.

பல நாட்களாக முதுகு வலியினால் துன்பப்பட்டுக் கொண்டிருந்த ஒரு சகோதிரியைத் தேவன் தன் வார்த்தையை அனுப்பிக் குணமாக்கினார். **“ஸ்திரீயே, உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய்” (லூக் 13:12)** என்றார். எனக்கும் உனக்கும் சுகத்தைக் கொடுக்க, நம்முடைய நுகத்தடியை எடுத்துப் போடுவதற்காக, இயேசு சிலுவை என்ற நுகத்தைத் தன் மேல் போட்டுக் கொண்டார். கசையடி என்னும் நுகத்தை ஏற்றுக் கொண்டார். நம்முடைய பெலவீனங்களைச் சுமந்து கொண்டார். இன்று நாம் அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். டாக்டர்களால் கண்டுபிடிக்க முடியாத சுமார் 39 வியாதிகள் உள்ளன என்று சொல்கிறார்கள். ஆனாலும், நாம் அவரைத் துதித்து ஸ்தோத்திரிக்கும் போது நம்முடைய பிராணனை அழிவுக்கும் விலக்கிப் பாதுகாப்பார்.

தேவ பிள்ளையே! இதை வாசிக்கும் அன்பு மகனே, மகளே! இயேசுவை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டிக்கின்றாயா? இயேசுவும் தெய்வம் என்று சொல்கிறாயா? அல்லது இயேசுவே தெய்வம் என்று சொல்கிறாயா? நானே தேவன். நான் கர்த்தர் நான் மாறாதவர் என்று அவர் தன்னைப் பற்றிக் கூறியிருப்பதைச் சற்று நோக்கிப் பாருங்கள். என்னில் பாவம் உண்டென்று யார் சொல்ல முடியும் என்று சவால் விட்ட தேவனை ஏற்றுக் கொண்டு, அவருடைய மெதுவான இலகுவான கற்பனைகளைக் கைக் கொண்டு நடக்க முயற்சி செய்யுங்கள். அப்பொழுது நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்று கூறி வியாதியை உன்னை விட்டு விலக்குவார்.

## பிசாசின் நுகத்தடி:-

சில சமயங்களில் பிசாசினால் நமக்குத் நுகத்தடி வருவதுண்டு. நாம் மகிழ்ச்சியாக, சமாதானத்தோடு வாழ்வதை விரும்பாதவன் பிசாசு யாரை விழுங்கலாம், யாரை விழத் தள்ளலாம் என்று சுற்றித் திரிகிறான். நயமான, பசப்பான வார்த்தைகளைக் கூறி நம்மை அவனுடைய வலைக்குள் விழ முயற்சி செய்வான். இயேசுவை சோதிக்க வந்த பிசாசை இயேசு மேற்கொண்டார். எதினால் மேற்கொண்டார்? எப்படி மேற்கொண்டார்? வசனத்தினால் அல்லவா? பிசாசின் கேள்விகளுக்கு ஏற்ற வசனத்தைக் கூறி ஜெயித்தார். இறுதியாக அப்பாலே போ சாத்தானே! உன் தேவனாகிய கர்ததரைப் பரீட்சை பாராதிருப்பாயாக! என்றார். மேலும், லூக்கா 23:31-ல் “பச்சை மரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்ட மரத்துக்கு என்ன செய்ய மாட்டார்கள்” என்று இயேசுவே கூறியிருப்பதால், நாம் பிசாசின் தந்திரங்களில் விழுந்துவிடதாபடிக் கவனமாக இருக்க வேண்டும்.

அசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட மனுஷன் ஒருவன் பிரேதக் கல்லறைகளிலிருந்து இயேசுவுக்கு எதிராக வந்தான். அவனுக்குள் அநேகம் பிசாசுகள் இருந்தபடியால் தன் பெயர் “லேகியோன்” என்றான் லேகியோன் என்றால் 6000 என்று அர்த்தமாம். அந்தப் பிசாசுகளின் நுகத்தடி அவன் மேல் வைக்கப்பட்டிருந்ததால் அவன் கல்லறையில் குடியிருந்தான். விலங்குகளினாலும் சங்கிலிகளினாலும் கட்டப்பட்டிருந்தாலும், சங்கிலிகளை முறித்து, விலங்குகளைத் தகர்த்துப் போட்டான். கூக்குரலிட்டுக் கொண்டிருந்தான். கல்லுகளினாலே தன்னைக் காயப்படுத்திக் கொண்டிருந்தான். அன்புப் பிள்ளையே! கொஞ்சம் சிந்தித்துப்பார். நீ எப்படி இருக்கிறாய்? நீ கல்லறையில் தங்காமல் வீட்டில் குடியிருக்கலாம். என்றாலும் உன்

செயல்பாடுகள் எப்படி இருக்கின்றது? உன்னையே நீ வருத்தி காயப்படுத்திக் கொள்கின்றாயா? உன்னையே நீ வெறுக்கின்றாயா? வாழ்க்கை கசப்பானதால், யோபுவைப்போல் பிறந்த நாளைச் சபித்துக் கொண்டிருக்கின்றாயா? அந்த லேகியோன் பிசாசு பிடித்தவன் கேட்டுக் கொண்டதுப் போல, அவைகளை இயேசு பன்றிக் கூட்டத்திற்குள் அனுப்பினார். அவன் விடுதலை பெற்றான். அவனைப் போல நீயும் எழுந்து இயேசுவிடம் வா. அவரிடம் உன் பாவங்களை, குறைகளை அறிக்கையிடு. அப்பொழுது அவர் பிசாசின் நுகத்தடியிலிருந்து உனக்கும் விடுதலை கொடுப்பார்.

**இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ் விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது** என்ற மத் 17:21 ஆம் வசனத்தின் படி உபவாசித்து ஜெபிக்க வேண்டும். தேவனுடைய சர்வாயுத வர்க்கங்களைத் தரித்துக் கொண்டு, பலவானாகிய பிசாசை இயேசுவின் நாமத்தினாலே கட்ட வேண்டும் நம்மிடம் காணப்படுகின்ற அக்கிரமத்தின் கட்டுகளை நீக்க வேண்டும். சந்தேகப்படாமல் விசுவாசத்தோடு உபவாசித்து ஜெபிக்கும் போது பிசாசை எதிர்க்கும் வல்லமையைப் பெற்றுக் கொள்ளலாம். அற்புதங்களைச் செய்யும் வரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

## அவிசுவாசத்தின் நுகத்தடி:-

உன் நண்பன் யார் என்று சொல்; நீ யார் என்று நான் சொல்கிறேன், பூவோடு சேர்ந்த நாறும் மணக்கும் என்பன பொன்மொழிகள். நுகத்தடி என்பது பிசாசினால் மட்டும் வருவதில்லை. நம்முடைய நண்பர்கள் மூலமாகவும் வருவதுண்டு. “அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக! நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்கு பங்கேது?” என்று 2கொரிந்தியர் 6:14,15ஆம் வசனங்களில் கூறியுள்ளபடி உங்கள் ஐக்கியம் யாரோடு இருக்கின்றது. அவிசுவாசிகளோடு சேரக் கூடாது என்று சொல்லவில்லை. கலந்து வாழக் கூடாது என்றும் சொல்லவில்லை. அப்படியானால் நீங்கள் உலகத்தை விட்டு நீங்கிப் போக வேண்டியதாயிருக்கும்.

அவிசுவாசிகளோடு சேர்ந்து தொழில் செய்யும் போது, சில காரியங்களுக்கு அவர்களோடு உடன்பாடு செய்து கொள்ள வேண்டியதிருக்கும். அதினிமித்தமாக சில நுகத்தடிகளை ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலையும் வரும். கர்த்தருடைய ஆவியோடு இணைந்து போகாதவர்களோடு நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டாம். வாலிபப் பிள்ளைகளின் கவனத்திற்கு ஒன்று கூற விரும்புகிறேன். வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். புறத்தோற்றத்தையும் இனிய பேச்சினையும் கண்டு மயங்கி விடாதே. இரட்சிப்பு உண்டா? ஒருமனப்பாடு காணப்படுகிறதா என்று சிந்தித்துப் பார். அவசரப்பட்டு முடிவெடுக்காதே. கர்த்தருடைய சித்தத்துக்குக் காத்திரு. நீ காத்திருந்தால் கட்டாயமாகக் கர்த்தர் பதில் கொடுப்பார். எனக்குக் காத்திருக்கிறவர்களோ ஒருபோதும் வெட்கம் அடைவதில்லை என்று சொல்லியிருக்கிறார் அல்லவா? எக்காரணம் கொண்டும் அவிசுவாசியோடு விவாகத்துக்கு உடன்பட்டு அதின் நுகத்தடியால் துன்பப்படாதே.

## சாபத்தின் நுகத்தடி:-


வேதத்தில் 275 முறை சாபம் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. “துன்மார்க்கனுடைய வீட்டில் கர்த்தரின் சாபம் இருக்கிறது” நீதிமொழிகள் 3:33. சாபம் என்ற

வார்த்தையை நாம் யாருமே விரும்புவது கிடையாது. சிலர் தனக்குப் பிடிக்காதவர்களைப் பார்த்துத் தீய வார்த்தைகளைச் சொல்லி சபிப்பதுண்டு. ஆனால், காரணமில்லாமலிட்ட சாபம் பலிக்காது என்று வேதம் சொல்லுகிறது. மனிதனுக்கு மனிதன் இடும் சாபத்தைக் கர்த்தர் மாற்றிப் போடுவார். ஆனால், கர்த்தரே சாபமிட்டால் யார் மாற்ற முடியும்? கர்த்தர் சாபமிடுவாரா? என்று கேட்கலாம். **"நீங்கள் கேளாமாலும் என் நாமத்துக்கு மகிமையைச் செலுத்தும்படி இதைச் சிந்தியாமலுமிருந்தால், நான் உங்களுக்குள்ளே சாபத்தை அனுப்பி உங்கள் ஆசீர்வாதங்களையும் சாபமாக்குவேன்"** என்று மல்கியா 2:3ல் கூறியுள்ளார். ஆகையால் துன்மார்க்க ஜீவியத்தை விட்டு விட்டு, முழு இருதயத்தோடு தேவனிடத்தில் அன்பு கூர்ந்து அவருடைய நாமத்தை நாம் மகிமைப் படுத்தினால் அவர் நம்மை ஆசீர்வதிப்பார். சாபத்தின் நுகத்தடி நம்மை மேற்கொள்ளாது.

மரத்திலே தூக்கப்பட்டவன் எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி, மீட்டுக் கொண்டார். அதனால், நம்முடைய சாபங்களையும் ஆசீர்வாதமாக மாற்றி விட்டார். சாபமில்லாமல் வாழும் நாம் எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் பரலோகத்திலும் ஒரு சாபமுமின்றி இயேசுவோடு வாழலாம்.

## நுகத்தடி எப்படி கடந்து போகும்:-

பாவத்தினாலும் சாபத்தினாலும் வியாதியினாலும், பிசாசினாலும் அவிசுவாசத்தினாலும் வந்த நுகத்தடியாகிய போராட்டங்களை மேற்கொள்வது எப்படி என்று நினைக்கின்றீர்களா? இவையெல்லாம் பிசாசினால் வரும் கிரியைகளே. பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்.(1யோ 3:8) மட்டுமல்ல சிலுவையிலே வெற்றி சிறந்தார். ஆகையால், அன்புப் பிள்ளைகளே! குமாரன் விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலை ஆவீர்கள். சத்தியத்தை அறிந்து கொள்ளுங்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும் **"கர்த்தரே ஆவியானவர் கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலை உண்டு"** (2கொரி 3:17). பயத்தின் ஆவி, இச்சையின் ஆவி, விபச்சாரத்தின் ஆவி முதலிய பொல்லாத ஆவிகளினின்று தேவகுமாரன் உங்களை விடுதலையாக்கி மெய்யான சமாதானத்தாலும், சந்தோஷத்தினாலும் நிரப்புவாராக!



**"நீங்கள் எகிப்தியருக்கு அடிமைகளாயிராதபடிக்கு,**

**நான் அவர்கள் தேசத்திலிருந்து உங்களைப் புறப்படப் பண்ணி,**

**உங்கள் நுகத்தடிகளை முறித்து உங்களை நிமிர்ந்து நடக்கப் பண்ணின**

**உங்கள் தேவனாகிய கர்த்தர்" – லேவி 26:13**

என்றென்றும் மகிமைப்படுவாராக! ஆமென்.

*கிறிஸ்துவுக்குள் அன்பான*
*Rev.V.இஸ்ரவேல் தேவதாசன்*

# சபையின் ஆராதனை ஒழுங்குகள்

## அக்டோபர் 2018

| நாள் | கிழமை | ஜெபங்களும் நேரங்களும் |
|---|---|---|
| 1 | திங்கள் | **ஆயத்த ஜெபம்** - காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 2 | செவ்வாய் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 3 | புதன் | **உபவாச மற்றும் ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 முதல் 1.00 மணி வரை (சபையில்) |
| 4 | வியாழன் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 5 | வெள்ளி | **மாலை ஆராதனை** - மாலை 06.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை (சபையில்) |
| 6 | சனி | No:15,பேப்பர் மில்ஸ் ரோடு S R P காலனி, சென்னை - 600082. Ph No : 9677007731 |
| 7 | ஞாயிறு | **ஓய்வுநாள் ஆராதனை** - காலை 09.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரை (சபையில்)<br>**பெண்கள் ஐக்கியம்** - மதியம் 12.00 மணி முதல் 1.30 மணி வரை (சபையில்)<br>**இரவு ஜெபம்** - இரவு 10.30 மணி முதல் 12.00 மணி வரை (சபையில்) |
| 8 | திங்கள் | **அதிகாலை ஜெபம்** - காலை 05.00 மணி முதல் மதியம் 06.30 மணி வரை (சபையில்)<br>● **அமாவாசை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.30 மணி வரை (சபையில்) |
| 9 | செவ்வாய் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 10 | புதன் | **உபவாச மற்றும் ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 முதல் 1.00 மணி வரை (சபையில்) |
| 11 | வியாழன் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 12 | வெள்ளி | **மாலை ஆராதனை** - மாலை 06.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை (சபையில்) |
| 13 | சனி | **கிராம ஊழியம்** - காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை |
| 14 | ஞாயிறு | **ஓய்வுநாள் ஆராதனை** - காலை 09.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரை (சபையில்)<br>**வாலிபர் கூட்டம்** - காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 16 | செவ்வாய் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 17 | புதன் | **உபவாச மற்றும் ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 முதல் 1.00 மணி வரை (சபையில்) |
| 18 | வியாழன் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 19 | வெள்ளி | **உபவாச ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 20 | சனி | **உபவாச ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 21 | ஞாயிறு | **உபவாச ஜெபம் / ஓய்வுநாள் ஆராதனை / ஞானஸ்நானம் / இராபோஜனம்**<br>- காலை 09.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரை (சபையில்) |
| 22 | திங்கள் | **ஆயத்த ஜெபம்** - காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 23 | செவ்வாய் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 24 | புதன் | ○ **பௌர்ணமி ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.30 மணி வரை (சபையில்)<br>**இரவு ஜெபம்** - இரவு 10.30 மணி முதல் 12.00 மணி வரை (சபையில்) |
| 25 | வியாழன் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 26 | வெள்ளி | **மாலை ஆராதனை** - மாலை 06.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை (சபையில்) |
| 26 & 27 | வெள்ளி & சனி | **திருச்செந்தூரில் உபவாச ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை<br>அப்போலோ கம்ப்யூட்டர் சென்டர், ஆதித்தனார் காலேஜ் எதிரில், வீரபாண்டிய பட்டிணம் ரோடு, திருச்செந்தூர். (Ph : 8903724440.`.94445224760) |
| 28 | ஞாயிறு | **ஓய்வுநாள் ஆராதனை** - காலை 09.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரை (சபையில்)<br>**வாலிபர் கூட்டம்** - காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 30 | செவ்வாய் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 31 | புதன் | **உபவாச மற்றும் ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 முதல் 1.00 மணி வரை (சபையில்)<br>**மாதத்தின் கடைசி நாள் இரவு ஜெபம்** - இரவு 10.30 மணி முதல் 12.00 மணி வரை (சபையில்) |




## சுகம் கொடுத்த தேவன்

**சகோதரி.சாராள், கருநீலம்**

கடந்த நாட்களில் என் கையில் அதிக வலி, வேதனையாக இருந்தது. ஐயாவிடம் வந்து ஜெபித்தேன். அமாவாசை ஜெபத்திலும் கலந்து கொண்டேன். ஜெபத்திலிருக்கும் போதே, என் தோள் பட்டையிலிருந்து ஒரு சுகம் உண்டாயிற்று. கர்த்தர் பூரண சுகம் தந்தார். மேலும் சென்ற வருடம் ‘‘ஆசீர்வாதமான வருடம்’’ என ஐயா மூலம் பேசினார். அதுபோலவே, எங்கள் சபையிலும் ஆத்துமாக்களை கர்த்தர் கொண்டு வருகிறார். ஜெபக் கூடுகையிலும் ஜனங்கள் கலந்து கொள்கிறார்கள். சிறுவர் ஊழியங்களை நடத்தவும் கர்த்தர் கிருபை செய்து வருகிறார். கர்த்தர் செய்து வரும் நன்மைகளுக்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம், ஜெபித்த ஐயாவுக்கு நன்றி.

## அற்புதங்களின் தேவன்

**சகோதரி.சித்ரா,சோழிங்கநல்லூர்**

எனது திருமணத்தின் போது எனது பெற்றோர் ஒரு இடம் கொடுத்திருந்தினர். அந்த இடம் புல்லும், புதரும் எதுவும் செய்ய முடியாத நிலையை இருந்தது. இடத்தினிமித்தம் மாமியார் வீட்டிலும் பல பிரச்சனை எழுந்தது. ஐயாவிடம் வந்து ஜெபித்தோம். அந்த இடத்தின் கட்டை உடைத்து ஜெபித்தார், நாங்களும் தொடர்ந்து 41 நாட்கள் ஜெபத்திலும் கலந்து கொண்டோம். கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம். கர்த்தர் எல்லா சாபத்தையும் மாற்றி அந்த இடத்தில் மூன்று வீடு கட்ட கிருபை செய்தார். வெளிநாட்டில் இருக்கும் எனது கணவருடன் போய் இருக்கவும் கிருபை செய்தார். எனது தாய் வீட்டில் உள்ள வீட்டு பிரச்சனைகளிலும் இருந்து தேவன் விடுதலை கொடுத்தார். எனது சகோதரருக்கும் திருமணத்தை நடத்தி கொடுத்தார். தேவன் செய்த எல்லா நன்மைக்களுக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம். எங்களுக்காக தொடர்ந்து ஜெபித்து வரும் ஐயாவுக்கு நன்றி.

# வெற்றி தந்த தேவன்

**சகோதரி.எப்சிபா,பழஞ்சூர்**

எனது மகள் பத்தாம் வகுப்பு தேர்வு எழுதினார். ஐயாவிடம் ஜெபிக்கும் போது கர்த்தருடைய வார்த்தை "நீ பாஸ் பண்ணுவாய், காலேஜில் சேருவாய் என வந்தது. இந்த வார்த்தையை வைத்து ஒவ்வொரு நாளும் நாங்கள் ஜெபித்து வந்தோம். தேர்வு எழுதச் செல்லும் போதும் அநேக தடைகள் வந்தது. நாங்கள் ஜெபித்தோம். பரீட்சை எழுதும் மாணவர்களுக்காக சபையில் நடந்த ஜெபித்திலும் கலந்துக் கொண்டோம். ஐயாவும் தொடர்ந்து மகளுக்காக ஜெபித்தார்கள். பள்ளியில் ஆசிரியர் இவள் நூறு தடவை தேர்வு எழுதினாலும் பாஸ் பண்ணமாட்டாள் என்று சொன்னார்கள். ஆனால் கர்த்தருடைய வார்த்தையின் படியே என் மகள் பாஸ் பண்ணவும், பாலிடெக்னிக் கல்லூரியில் சேரவும் தேவன் கிருபை செய்தார். அற்புதங்களின் தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கு நன்றி.

# சுகம் தந்த தேவன்

**Baby.எஸ்தர் ஜாய், கூடுவாஞ்சேரி**

எனக்கு ஜுரமாக இருந்தது. பௌர்ணமி ஜெபத்திற்கு வந்தேன். பாஸ்டர் தாத்தா எனக்காக ஜெபித்தார்கள், இயேசப்பா எனக்கு சுகம் தந்தார். இயேசப்பாவிற்கு நன்றி. ஜெபித்த பாஸ்டர் தாத்தாவுக்கு நன்றி.

# வீடு வாசல்களை ஏற்படுத்தும் தேவன்

**சகோதரி.இந்திரா,சத்தியாநகர்**

கர்த்தர் என்னை இந்த சபைக்கு கொண்டு வந்து, நான் நிர்மூலமாகாமல் என் ஜீவனை இம்மட்டும் பாதுகாத்து வருகிறார், கர்த்தருக்கு ஸ்தோத்திரம். சரியான ஒரு வீடு இல்லாமல் ரொம்ப கஷ்டப்பட்டு வந்தேன். கர்த்தர் ஐயா மூலம் எனக்கு ஒரு நல்ல வீட்டைக் கட்டித் தந்தார். சபை மக்கள் அனைவரும் எனக்கு உதவி செய்தார்கள். எனக்கு ஜீவனையும் கூட்டிக் கொடுத்து, வீட்டையும் கட்டித் தந்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம். எனக்காக ஜெபித்து வரும் ஐயாவுக்கு நன்றி.

# வருமானத்தை கூட்டித் தந்த தேவன்

**சகோதரர்.மாற்குமுத்து,கொளத்தூர்**

நான் 5 வருடமாய் சபைக்கு வந்து கொண்டிருக்கிறேன். எனது வேலையில் போராட்டமாக இருந்தது. சரியான வருமானம் இல்லாமல் இருந்தது. என்னால் தசமபாகம் சரிவர கொடுக்க முடியவில்லை. ஐயாவிடம் சொல்லி ஜெபித்து சென்றேன். தேவன் எல்லா தடையை மாற்றி, வருமானத்தை கூட்டிக் கொடுத்துள்ளார். கர்த்தர் செய்த நன்மைக்காக கர்த்தருக்கு கோடி ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கும் நன்றி.

# ஜீவனை மீட்ட தேவன்

**சகோதரி.திவ்யா,மாடம்பாக்கம்**

நான் ஏப்ரல் மாதம் கடைசியில் என் சித்திக்காக ஜெபிக்க இங்கு வந்தேன். அவர்களுக்கு Stroke வந்து கை, கால், வாய் சரிவர செயல்படாதபடி ஆகிவிட்டது. மீண்டும் Stroke திரும்ப திரும்ப வந்துவிட்டது. டாக்டர்களுக்கு என்ன காரணம் என்று புரியவில்லை எங்களால் முடியாது என்று சொல்லிவிட்டார்கள். ஐயாவிடம் சொல்லி ஜெபித்தேன். ஐயா ஜெபித்துவிட்டு, நிறைய கட்டுகள் இருக்கிறது. முடிந்தால் இங்கு கொண்டு வாருங்கள். இல்லையெனில் 21 நாட்கள் உபவாசம் போட்டு ஜெபியுங்கள் எனச் சொன்னார்கள். என் சித்திக்காக நான் உபவாசமிருந்து ஜெபித்தேன். கர்த்தர் அவர்கள் சரீரத்தில் நல்ல முன்னேற்றம், மாற்றத்தை தந்துள்ளார். அற்புதம் செய்து வரும் தேவனுக்கு ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கு நன்றி.

## திருமணத்தை ஏற்படுத்தின தேவன்

**நெடுங்குன்றம் சகோதரி**



எனக்கு 2014 ஆம் ஆண்டிலிருந்து திருமணத் தடையாகவே இருந்தது. எங்கள் வீட்டில் மூன்று பேரும் பெண் பிள்ளைகள். 2016ல் என் அம்மாவும் பைக் விபத்தில் இறந்துவிட்டார்கள். இந்த நெருக்கடியான சூழலில், யார் எங்களை திருமணம் செய்வார் என்று பயந்து இருந்தோம். 2017ஆம் ஆண்டு ஜெபத்திற்கு வந்தோம். அமாவாசை ஜெபத்திலும் கலந்து கொண்டோம். ஐயா ஜெபித்து விட்டு, ''ஆறு மாதத்திற்குள் திருமணம் நடக்கும், எல்லா தடைகளும் மாற்றப்படும்'' என்று சொன்னார்கள். அதன்படி ஜனவரி மாதம் திருமணம் நடக்க கிருபை செய்தார். தேவைகளையும் கர்த்தர் அற்புதமாக சந்தித்தார். அற்புதம் செய்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம் ஜெபித்த ஐயாவுக்கும் நன்றி.

## வார்த்தையின் படி வேலையைக் கட்டளையிட்ட தேவன்

**சகோதரி.சாராள்,சோழிங்கநல்லூர்**



என்னுடைய இளைய மகன் ஹோட்டல் மேனேஜ்மெண்ட் படித்துள்ளான். அவனுக்கு வேலை கிடைக்கவில்லை ஐயாவிடம் ஜெபித்தோம் வேலை கிடைத்தது. அங்கு பலவித கஷ்டங்கள், துன்பங்கள், பிசாசின் போராட்டத்தில் கஷ்டப்பட்டான். ஐயாவிடம் சொல்லி ஜெபித்தேன். ''கர்த்தர் சென்னையிலேயே அவனுக்கு வேலை கட்டளையிட்டார். அவன் இங்கு இருக்கட்டும்'' என்று சொன்னார்கள். அதன்படியே மகனுக்கு சென்னையில் வேலை கிடைத்தது. Trainee ஆக கிடைத்ததால் அவன் போகமாட்டேன் என்றான். நாங்கள், ஆண்டவருடைய வார்த்தை வந்திருக்கிறது, நீ போ என்றோம். அதன்படி அவன் வேலைக்கு சென்றான். என்ன அதிசயம் ஐயா மூலம் வந்த வார்த்தையின்படியே மூன்று மாதத்தில் அவனை Staff ஆக்கிவிட்டனர். கர்த்தருடைய வார்த்தையின்படியே, தேவன் கொடுத்த வேலைக்காக கோடி ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கு நன்றி.

## அற்புத சுகமளிக்கும் தேவன்

**சகோதரி.புஷ்பா, பெருங்களத்தூர்**

போன மார்ச் மாதம் 25ஆம் தேதி எனக்கு இடது கை வராமல் போய்விட்டது. ஆஸ்பத்திரியில் இது நடுமுதுகெலும்பு தண்டு பிரச்சனை. ஆப்பரேஷன் செய்தால் தான் சரியாகும் என்று சொன்னார்கள். ஐயாவிடம் வந்து ஜெபித்தேன். இது பிசாசு போராட்டத்தினால் வந்தது. உன்னை Chairலேயே இருக்க வைக்க வேண்டும் என்பது சத்துருவின் திட்டம் என்று சொல்லி ஐயா மூன்று முறை எனக்காக பாரத்தோடு ஜெபித்தார்கள். அம்மாவும் ஜெபித்தார்கள். கர்த்தர் மனமிரங்கி எனது கை, கால் நன்றாக செயல்படும்படி செய்தார். சுகம் தந்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம். ஜெபித்த அம்மா, ஐயாவுக்கு நன்றி.




Hello குட்டீஸ்! உங்களை மீண்டும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. கடந்த மாதம் அக்கா சொன்னது போல உங்களிடம் இருக்கிற தாலந்தைக் கண்டுபிடித்து பயன்படுத்த ஆரம்பிச்சிட்டீங்களா? எல்லாக் காரியத்தையும் தேவனின் ஞானத்தோடும் உதவியோடும் செய்ய முயற்சி செய்யுங்கள். சாலமோனைப் போல, தாவீதைப் போல, தானியேலைப் போல இன்னும் பல விசுவாச வீரர்களைப் போல தேவனைச் சார்ந்து வாழப் பழகிக் கொள்ளுங்கள்.

இந்த மாதம் அக்கா, உங்களுக்கு இரக்கம் காட்டுவதைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். இரக்கம் என்று சொன்னவுடனே உங்களுக்கு இயேசப்பா ஞாபகம் வருகிறதல்லவா? இயேசப்பா இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும் உள்ளவர் அல்லவா? உன்னைப் போல பிறரையும் நேசி என்றும் சொல்லியிருக்கிறார் அல்லவா? பிறர் துன்பப்படும் போது ஐயோ பாவம் என்று சொல்லி விடுகிறோம். விலங்குகள், பறவைகளைப் பார்த்து ஆச்சரியப்பட்டு சந்தோஷப்படுகிறோம் ஆனால், அவைகள் பாடுபடும் போது ஐயோ பாவம் என்று சொல்லி பரிதாபப்படுகிறோம். ஆனால், நன்மை ஏதும் செய்யாமல் அப்படியே விட்டு விடுகிறோம் நம்மைப்போல இயேசுவும் நம்மைக் காப்பாற்றாமல் விட்டு விட்டால் நம் நிலைமை என்ன ஆயிருக்கும்? பறவைகள், விலங்குகள், மனிதர்களுக்கு மட்டுமல்ல, மரம், செடி, கொடிகளுக்கும் நாம் இரக்கம் காட்ட வேண்டும் என்பதை விளக்க அக்கா ஒரு கதையைச் சொல்லுகிறேன்.

ஓர் அழகிய கிராமத்தில் சாம் என்று ஒரு அண்ணா இருந்தானாம். அந்த அண்ணா படிப்பில் படு சுட்டி மட்டுமல்ல, பேப்பரைக் கொண்டு படகு, பூக்கள், வீடு விமானம், வாழ்த்து மடல்கள் போன்ற பலவிதமான பொருட்களைக் கண்ணைக் கவரும் வகையில் செய்வானாம் ஆனால், அந்த அண்ணாவிற்கு ஒரு கெட்ட பழக்கம் இருந்தது. என்னவென்றால், தன் தங்கை தன் தோட்டத்தில் நட்டு

வைத்திருக்கும் செடிகளை எல்லாம் பிடுங்கி எறிந்து விடுவானாம் அது அவனுக்குப் பொழுது போக்காகக் காணப்பட்டது.



ஒரு நாள் வழக்கம் போல கிளையை வெட்ட ஒரு மரத்தின் மேல் ஏறினான். அந்த கிளை இவனைத் தாங்க முடியாமல் முறிந்து விழுந்தது. விழுந்த கிளை பேச ஆரம்பித்ததாம் Hello சாம், ஏன் இவ்வாறு எங்களைத் துன்பப்படுத்து கிறாய்? நாங்கள் உனக்கு ஒரு தீமையையும் செய்வ தில்லை, மழையைத் தருகிறோம். குளிர்ச்சியான காற்றைத் தருகிறோம். நிலச்சரிவு வராமல் தடுக்கிறோம், பறவைகள், விலங்குகள் தங்க அடைக்கலம் கொடுக்கிறோம். மனிதர்களுக்குத் தேவையான சுவாசக் காற்றாகிய ஆக்ஸிஜனைத் தருகிறோம் உனக்கு இன்னும் ஒண்ணு சொல்லட்டுமா! நீ செய்கிறாயே கலைப் பொருட்கள் அந்தப் பொருட்களைச் செய்யக் கூடிய பேப்பரையே நாங்கள் தான் தருகிறோம். இதனைக் கேட்ட சாம் ஐயையோ நான் என்ன காரியம் செய்தேன் என்று சொல்லி அழ ஆரம்பித்தானாம். அதனைக் கண்ட மரம் அவனைத் தட்டிக் கொடுத்து இனிமேல் இப்படிச் செய்யாதே என்றதும், சாம் துள்ளிக் குதித்தானாம். சாம் அண்ணாவின் அம்மா என்ன ஆயிற்று தட்டி எழுப்பிக் கேட்ட போதுதான் தான் கண்டது கனவு என்று அறிந்து, அம்மா இனிமேல் நான், எப்போதும் மரம், செடி, கொடிகளை வெட்ட மாட்டேன் என்றானாம் அவைகளைப் பாதுகாக்க ஆரம்பித்தானாம். என்ன பிள்ளைகளே! நீங்களும் சாம் அண்ணனைப் போல மரம், செடி, கொடிகளை பாதுகாத்து வளர்க்க முயலுங்கள்.



## மனப்பாட வசனம்

**"இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் இரக்கம் பெறுவார்கள்"**

**மத் 5:7**



# சமையல்



## மட்டன் நோன்பு கஞ்சி



**தேவையான பொருள்கள்**

| | | |
|---|---|---|
| பாசிப்பருப்பு | : | 1-2 கிலோ |
| அரிசி | : | 1-2 கிலோ |
| மட்டன் கைமா | : | 1-4 கிலோ |
| பச்சை மிளகாய் | : | 4 |
| இஞ்சி பூண்டு விழுது | : | 1ஸ்பூன் |

**தாளிக்க**

| | | |
|---|---|---|
| லவங்கம், பட்டை,ஏலகாய், | | |
| பிரிஞ்சி இலை | : | தேவைக்கேற்ப |
| நெய் | : | 100 கிராம் |
| மிளகாய் தூள் | : | தேவைக்கேற்ப |
| தக்காளி | : | 1-4 கிலோ |
| வெங்காயம் | : | 4 |
| தேங்காய் | : | அரைத்தது ஒரு கப் |
| கரம் மசாலா | : | 1ஸ்பூன் |
| உப்பு | : | தேவைக்கேற்ப |

**செய்முறை:**

அரிசியையும், பாசிப் பருப்பையும் நன்கு வேக வைக்கவும். வேகும் போதே கைமாவை கரம் மசாலா, இஞ்சி, பூண்டுவிழுது, வெங்காயம் அறிந்தது ஆகியவற்றை அதில் சேர்க்க வேண்டும். எல்லாவற்றையும் சேர்த்து கொத்தமல்லி புதினா தேங்காய், தக்காளி சேர்த்து நன்கு வெந்ததும் சிறிய வெங்காயத்தை நெய்யில் தாளித்து கலக்கி இறக்கவும். நோன்பு திறக்கும் கஞ்சி, இது முப்பது நாளும் செய்யப்படும் (முஸ்லீம்)

## அரிசி ரொட்டி

**தேவையான பொருட்கள்**

| | | |
|---|---|---|
| புழுங்கல் அரிசி | : | 1-2 கிலோ |
| நெய் | : | 250 கிராம் |
| தேங்காய் பால் | : | 2 |
| சோம்பு | : | சிறிது |



**செய்முறை:**

அரிசியை நன்கு ஊற வைத்து கிரைண்டரில் போட்டு சிறிது தண்ணீர் சேர்த்து அரைக்கவும். சோம்பு சேர்க்கவும் மென்மையாக கெட்டியான பதத்தில் அரைத்துக்கொண்டு, உருண்டைகளாகப் பிடித்து வைத்துக் கொள்ளவும். தோசைக் கல்லில் நெய் ஊற்றி உருண்டையை வைத்து இருபுறமும் வேக வைக்கவும், அப்படியே எடுத்து தேங்காய் பாலில் வைக்கவும். அதில் சர்க்கரை சேர்த்து சாப்பிடலாம் அல்லது குருமா சேர்த்தும் சாப்பிடலாம், கறி குருமா அல்லது மட்டன் சுக்கா பிரை இதற்கு ஏற்றது.

# இயேசுவின் இரத்தம்




கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே உங்கள் யாவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன் ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாகிறான் அவனுக்குள் காணப்படும் ஜென்ம சுபாவங்கள் மாற்றப்படும். ஆனால் இயேசு சுவாமி நம்முடைய பாவங்களுக்காக மரித்து மூன்றாம் நாள் உயிர்பிக்கப்பட்டார்.

பாவங்களில் எத்தனையோ பாவம் இருக்கிறது கொலை, கொள்ளை, விபச்சாரம், வேசித்தனம், இச்சைகள், பொறாமை, பெருமை, புறங்கூறுதல் இன்னும் எத்தனையோ பாவங்கள் உள்ளன. நம் இயேசு சுவாமி நம்முடைய பாவங்களுக்காக மரித்தார்.

கிறிஸ்துவின் இரத்தம் சாதாரண முறையில் சிந்தப்படவில்லை. கல்வாரி சிலுவையிலே அவர் அடித்து நொறுக்கப்பட்டு காயங்களை ஏற்று பிழியப்பட்டதின் மூலமாக இரத்தம் பாய்ந்து வந்தது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் குற்ற மற்றதாகும்.

அவர் பாவம் அறியவில்லை, பாவம் செய்யவும் இல்லை வஞ்சனையான வார்த்தைகள் அவர் உதடுகளில் காணப்படவும் இல்லை. குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்கள் என்று அறிந்திருக்கீறீர்களே (1பேதுரு 1:19)

பொன் வெள்ளியைப்பார்க்கிலும் அவருடைய இரத்தம் விலையேறப் பெற்றது. தேவ பிள்ளைகளே சிலுவையண்டை வாருங்கள் அவருடைய இரத்தம் விலையேறப் பெற்றது. அது நம்மை சுத்திகரிக்கும். நம்மிலே அன்பு கூர்ந்து தமது இரத்தத்தினால் நம்முடைய பாவக்கறை நீக்கி நம்மை கழுவி சுத்திகரிக்கும்.

தேவ பிள்ளைகளே பாவத்துக்கும் வியாதிக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கிறபடியால் நீங்கள் வியாதிப்படும் போதெல்லாம் உங்களுடைய பாவங்களுக்காக மனம் கசந்து அழுது கர்த்தரிடத்தில் மன்னிப்பைபெற்றுக் கொள்ளுங்கள்.

“நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராயிருக்கிறார். (1யோவான் 1:9)

உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால் சபையில் உள்ளவர்களை வரவழைப்பனாக அவர்கள் கர்த்தருடைய நாமத்தினால் எண்ணெய் பூசி ஜெபம் பண்ணக்கடவர்கள்.

வியாதியை பொதுவாக சாத்தானே கொண்டு வருகிறான். வியாதியினால் எந்த நன்மையும் ஏற்படுவதில்லை. தன்னுடைய பிள்ளைகள் வியாதியாய் இருப்பதை யாரும் விரும்புவதில்லை. அப்பொழுது அவர்கள் ரொம்ப கஷ்டப்படுவார்கள். தன் பிள்ளைக்கு வருகிற வியாதியை சகிக்காதவர்கள் பிறர் கஷ்டத்தை புரிந்து அவர்களுக்காக ஜெபிக்கிறவர்களாய் காணப்பட வேண்டும்.

யூதாஸ் அவரை காட்டிக்கொடுத்து, அவர் உள்ளத்தை துன்பப்படுத்தினான் இயேசுவுக்கு சீடனாய் இருந்த பேதுரு அவரை அறியேன் என்று சொல்லி சபித்து சத்தியம் பண்ணி காயப்படுத்தினான்.

இயேசு கிறிஸ்து நோயை மட்டும் சுமக்கவில்லை நம்முடைய பாவங்களையும் சுமந்துத்தீர்த்தார். சவுக்கடியையும் நமக்காக சுமந்தார்.

இயேசு கிறிஸ்து நம்முடைய பெலவீனங்களையெல்லாம் சிலுவையில் சுமந்தார்(மத்தேயு 8:17) நாம் பாவங்களுக்கு செத்து நீதிக்கு பிழைக்கும் படிக்கு, இயேசு சுவாமி தம்மை தாமே சிலுவையில் சுமந்தார். அவருடைய தழும்புகளால் சுகமானோம். (1பேதுரு 2:24)

மனிதனை மனிதன் சபிப்பது உண்டு. மாதா, பிதா, குருமார்களிடம் இருந்து சாபங்கள் வருவது உண்டு. ஆனால் ஆண்டவர் நம்முடைய சாபங்களையும், பாவங்களையும் தீர்க்க தம்முடைய தலையில் முள் முடியினால் சூட்டப்பட்டார்.

சிலர் துக்கத்தோடு சொல்லுவார்கள் எவ்வளவு சம்பாதித்தாலும் கடன் தான் கூடவே வருகிறது. எவ்வளவு முயற்சித்தும் முன்னேற முடியவில்லை. எந்த வியாபாரத்தை தொடங்கினாலும் நஷ்டம் தான் வருகிறது. என் பிள்ளைகள் படிக்கவில்லை திருமணம் ஆகவில்லை, வேலையில்லை இந்த சாபங்கள் எல்லாம் நான் எப்படி சாமளிப்பேன்.

உன் சாபங்கள் நீங்க வேண்டும் என்றால் தேவனோடு உறவாடி பாவத்தை அறிக்கையிடு.

பிரியமானவனே உன் ஆத்துமா வாழ்கிறது போல, நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாய் இருக்கும்படி வேண்டுகிறேன். (IIIயோவான் 2) அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.


1. முதலாவது சாபம் தேவனிடத்திலிருந்து வருகிற சாபம். 'ஏதேன் தோட்டத்திலே தேவனிடத்திலிருந்து ஆதாம், ஏவாள் மேலும் மனுகுலத்தின் மேலும் வந்தது. ஆதாம் ஏவாள் புசிக்கக் கூடாது என்ற கனியை புசித்ததினால் அவருடைய இருதயம் உடைந்தது ஆதி 3:17,18 அவர் சாபமாககொடுத்தார்.

தேவன் மனிதனுக்கு நெற்றி வேர்வை சிந்திபாடுபடுவாய் என்றும் பெண்களுக்கு வேதனையோடு பிள்ளை பெறுவாய் என்றும், பாம்புக்கு வயிற்றினால் நகர்ந்து மண்ணை தின்னுவாய் என்றும் சாபம் இட்டார். தேவன் பூமியின் மேல் இட்ட சாபத்தினால் வியாதிகளும், மரணமும் வந்தது. காட்டில் வாழும் மிருகங்கள் துஷ்ட மிருகமாக மாறியது.

தாவீது சொல்கிறார் அபிஷேகம் பண்ணப் பட்டவர்கள் மேல் நான் என் கையை நீட்டமாட்டேன் சவுலின் அங்கியில் ஒரு துண்டை வெட்டிக் கொண்டு போனான். அதினிமித்தம் தாவீதின் உள்ளம் அடித்து கொண்டது.

தேவ பிள்ளைகளே அபிஷேகம் பண்ணப்பட்ட ஊழியகாரருக்கு விரோதமாக எழாதிருங்கள். காலகாலமாய் இன்னும் சொல்லப்போனால் தலைமுறை தலைமுறையாய் சாபத்தை வாங்கி கொள்ளாதிருங்கள்.

நியாயப்பிரமானத்தை மீறுவது பாவமே, அதையும் மீறி வருவது சாபமே மனிதனிடம் இருந்து சாபங்கள் வரும். எப்படியெனில் ஒரு மனிதன் தனக்கு இழைக்கப்பட்ட அநீதி துரோகம், தாங்க முடியாமல் கொடுமை செய்தவனை சபிக்கிறான். மனைவிக்குத் துரோகம் செய்துவிட்டு வேறொரு பெண்ணோடு வாழும் பொழுது மனைவி சபிக்கிறாள். சில தாய்மார்கள் பிள்ளைகள் கவனிக்காவிடில் சாபமாய் இடுகிறார்கள். பிசாசினால் வரும் சாபம், முற்பிதாக்களிடத்திலிருந்து வரும் சாபம், தங்களுக்கு தாங்களே சாபத்தை வரவழைத்து கொள்ளுகிறார்கள்.



சிலர் அவிசுவாசமான வார்த்தைகளால் தங்கள் மேலேயே சாபங்களை சுமந்து கொள்கிறார்கள். எலியா பஞ்சம் நிறைந்த நாட்களில் சாரிபாத்திலுள்ள விதவை வீட்டிற்கு போனார். அந்த விதவை துக்கத் தோடு சொன்னாள். பானையில் ஒரு பிடி மாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அல்லாமல் என்னிடத்தில் ஒரு அடையும் இல்லை நானும் என் மகனும் சாப்பிட்டு செத்துபோக அவனுக்கு ஆயத்தப்படுத்த விறகு பொறுக்கிறேன் என்றாள். 1இராஜ 17:12

சில மாதங்களுக்கு பிறகு அந்த மகன் வியாதிப்பட்டு இறந்து போனான். உங்கள் வார்த்தை குறித்து எச்சரிக்கையாய் இருங்கள் சில பெண்கள் தன் கணவன் இறப்பதற்கு முன்னதாகவே நான் மரிக்க வேண்டும் சொல்வார்கள். அது அவர்களுக்கே சாபமாக மாறிவிடும் சங் 109:17,18

எந்த ஊழியக்காரரையும் குறை சொல்லி மேலும் சாபங்களை வாங்கி கொள்ளாமல் அவர்களுடைய அன்பையும் நட்புனர்வையும் நாடுங்கள். மனப் பூர்வமாய் ஊழியரை ஆசீர்வதியுங்கள். அப்பொழுது உங்கள் குடும்பம் ஆசீர்வதிக்கப்படும். கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்கவே விரும்புகிறார். வெளி 22:3 உபாகமம் 23:5

பாவத்தை நாம் அறிக்கையிடும் பொழுது தேவனாகிய கர்த்தர் உட்பிரவேசிப்பார். அவர் சேனைகளின் தேவன். சங் 24:7 யோவன் 1:12 ரோமர் 8:15

இன்றைக்கு பாவ மன்னிப்பை குறித்து அநேகர் சர்வ சாதாரணமாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பாவம் மன்னிப்பில்லாதபடி மனச்சாட்சி குத்தப்பட்டு கிடக்கும். இயேசுவின் இரத்ததால் நீங்கள் கழுவப்படும் பொழுது உங்கள் வாழ்க்கையில் புயல் வீசினாலும் கடல் கொந்தளித்தாலும் நீங்கள் அசைக்கப்படுவதில்லை.

இரத்தம் சிந்துதல் இல்லாமல் மன்னிப்பு கிடையாது. பாவநிவர்த்தி செய்யப்படுகிறது.
லேவி 8:11,12 இயேசுவின் இரத்தம் ஏழுதரம் தெளிக்கப்பட வேண்டும். ஆத்துமாவிற்கும், பாவ நிவிர்த்தி கொள்வதற்கும் கர்த்தருடைய சந்நிதியில் தெளிக்கப்பட வேண்டும்

லேவி 4:5,6 அபிஷேகம் பெற்ற ஆசாரியர்கள் ஏழுதரம் கர்த்தருடைய சந்நிதத்தில் தெளிக்க வேண்டும். பலி பீடம் சுற்றிலும் தெளிக்கப்பட வேண்டும். வீட்டின் வாசலில் தெளிக்கப்பட வேண்டும் வாசலின் நிலைக்கால்களில் தெளிக்கப்பட வேண்டும். தேவ சமுகத்தில் நிற்கச் செய்கிறது. வெளி 7:14

மரணத்தை ஜெயிக்க செய்கிறது. சமாதானம் கொடுக்கும் இரத்தம். ஒவ்வொரு நாளும் நாம் இரத்தக்கோட்டைக்குள் மறைக்கப்படுகிறவர்களாய் காணப்பட வேண்டும்.

இப்படிக்கு
உங்களுக்காக ஜெபிக்கும்
அன்பு சகோதரி. மேபல் இஸ்ரவேல்

## கடந்த மாத வேத வினாக்களுக்கான விடைகள்

1. பேதுரு இயேசுவைப் பார்த்து கூறியது மத்தேயு 19:27
2. உங்களுக்கு பணிவிடைக்காரனாயிருக்கடவன், உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன் மத்தேயு 20:26
3. எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேம் மீகா 5:2
4. நாகூம் 1:7
5. ஏழைகள், ஊனர், சப்பாணிகள், குருடர் லூக்கா 14:13,14
6. நாசரேத் - லூக்கா 4:16,17
7. கர்த்தருடைய நீதிகளை மீகா 6:5
8. சத்திய நகரம் சகரியா 8:3
9. அபியத்தார் மாற் 2:26
10. கர்த்திருடைய பெரியநாள், கர்த்தருடைய நாள் - செப்பனியா 1:14




# தியாகச் செம்மல்

## டேவிட் லிவிங்ஸ்டன்

(1813-1873)

### ஆரம்ப வாழ்க்கை:-



1813 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பத்தொன்பதாம் தேதி டேவிட் லிவிங்ஸ்டன் ஸ்காட்லாந்து தேசத்தில் பிறந்தார். உண்மைக் கிறிஸ்தவர்களாகிய தன் பெற்றோர்களிடமிருந்து கிறிஸ்தவ ஒழுக்கங்களைக் கற்றுக் கொண்டார். தனது ஒன்பதாம் வயதிலேயே 119ஆம் சங்கீதத்தை மனப்பாடமாகச் சொல்ல முடியும். வறுமையின் காரணமாகப் பள்ளிப் படிப்பைத் தொடர முடியாமல், பஞ்சாலையில் வேலைக்குச் சேர்ந்தார்; கடின வேலையின் மத்தியிலும் இலத்தீன் மொழியைக் கற்றுக் கொண்டார். ஆலையில் திறமையாகப் பணியாற்றியதால் பதவி உயர்வும், ஊதிய உயர்வும் கிடைத்தது. அந்தப் பணத்தைக் கொண்டு கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் கிரேக்க மொழியையும் மருத்துவத்தையும் கற்று வந்தார். இறையியல் நூல்களையும் கற்று வந்தார். இத்தகைய கடின உழைப்பும் வாழ்க்கைத் துன்பங்களும் அவருக்குப் பிற்காலத்தில் பணித்தளத்தில் பாடுகளைச் சகிக்க பயிற்சியாக அமைந்தது.

### பொழுதுபோக்கு:-

லிவிங்ஸ்டனுக்கு விளையாட நேரம் இருந்ததில்லை ஆனால், ஆற்றோரமாகச் செல்லும் பாதையில் தன் வீட்டிற்கு நடந்து செல்வதை இன்பமாகவும் பொழுதுபோக்காகவும் கொண்டார். மீன் பிடிப்பதிலும் இயற்கைக் காட்சிகளைக் கண்டு இரசிப்பதிலும் ஆர்வம் அதிகம். பூக்கள், மலைகள், குன்றுகளைப் பார்த்து தன் அறிவைப் பெருக்கிக் கொண்டார் வேதத்தை வாசித்து, தியானித்து, நேசித்தது பிற்காலத்தில் அவருக்குப் பெரிதும் உதவியாக இருந்தது.

### ஆப்பிரிக்க நாட்டிற்கு அழைப்பு:-

லிவிங்ஸ்டன் தனது இருபதாவது வயதில் கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு அயல் நாடுகளில் மிஷனரியாகச் செல்ல தீர்மானித்தார். ஒரு ஜெர்மானிய மிஷனரி சீன நாட்டில் ஊழியம் செய்ய ஒரு மருத்துவ மிஷனரி தேவை என்று லிவிங்ஸ்டனுக்கு எழுதியிருந்தார். அதைப் பார்த்த லிவிங்ஸ்டன் தனது இரண்டாண்டு மருத்துவப் படிப்பை முடித்து விட்டு சீனாவுக்குச் செல்ல ஆயத்தமானார். ஆனால் அங்கு உள்நாட்டு யுத்தம் நடந்து கொண்டிருந்தபடியால் அங்கு செல்வது தடையாயிற்று.

கர்த்தருடைய வழி நடத்துதலுக்காகக் காத்திருந்த போது ஆப்பிரிக்க மிஷனெரி ஒருவர், இலண்டன் நகரின் தேவைகளைக் குறித்துப் பேசினார் அவர் சொன்னதாவது:

ஆப்பிரிக்க நாட்டில் ஆயிரக்கணக்கான கிராமங்களில் புகை மண்டலத்தை நான் பார்த்தேன் அவர்கள் கடவுளற்றவர்கள் கிறிஸ்துவை அறியாதவர்கள். உலகில் நம்பிக்கை அற்றவர்கள். இந்தப் பேச்சு லிவிங்ஸ்டன் உள்ளத்தில் கிரியை செய்தது. கப்பல் பிரயாணத்தின் போது நட்சத்திரங்களைப் பற்றியும், ஆப்பிரிக்கா இறங்கியதும் வான சாஸ்திரம் பற்றியும் கற்றுக் கொண்டார். பிற்காலத்தில் அவர் இருண்ட காடுகளில் பிரயாணம் செய்ய நேரிட்ட போது மிகவும் உதவியாக இருந்தது.

## இருண்ட கண்டத்தில் டேவிட் லிவிங்ஸ்டன்

இருண்ட கண்டம் என்று அழைக்கப்படும் ஆப்பிரிக்காவில் குருமான் என்ற இடத்தை அடைந்தார் அங்குதான் ராபர்ட் மொ∴பட் பணியாற்றிக் கொண்டிருந்தார். கடவுள் பெரியதொரு திருப்பணியைத் தனக்கு வைத்திருப்பதாக உணர்ந்தார். அதுவரை ஒருவரும் உட்செல்லாத பகுதிக்குச் செல்ல விரும்பினார். இதுவரை எவருமே செய்யாத ஒரு பணிக்குக் கடவுள் தம்மை அழைத்திருப்பதாகவும் உணர்ந்து கொண்டார். சுவிசேஷத்திற்காக செல்ல முடியாத உட்பகுதிகளைத் தாமே சென்றடையத் தீர்மானித்தார்.

## சிங்கத்தை வேட்டையாடுதல்:-


மோபட்சா என்ற பள்ளத்தாக்கில் தங்கிப் பணிபுரியத் தெரிந்து கொண்டார். அங்கிருக்கும் போது ராபர்ட் மொ∴பட் அவர்களின் மகளான மேரி மொ∴பட் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். சிங்கங்களின் தொல்லை அதிகமாகக் காணப்பட்டது. மோபட்சா பள்ளத்தாக்கு மக்கள் லிவிஸ்டனின் உதவியை நாடினார்கள். ஒரு சிங்கத்தைக் கொன்று விட்டால், மற்ற சிங்கங்கள் ஓடி விடும் என்று நினைத்து, அந்த மக்களோடு சென்றார் சிங்கத்தைச் சுட்ட போது அது அவர் மேல் பாய்ந்து தோள் பட்டையைக் கிழித்து விட்டது. அந்தக் காயம் சுகமாக அதிகமான நாட்கள் ஆனதோடு வடுவும் ஏற்பட்டு, கை ஊனமாகவும் மாறி விட்டது. அந்தத் தழும்பை வைத்துதான் அவர் மரித்த பின் அவரது உடலைக் கண்டுபிடிக்க முடிந்தது.

## வடபகுதியை நோக்கிச் செல்லுதல்:-

ஆப்பிரிக்காவின் வடபகுதிக்குச் செல்ல வேண்டுமானால் மிகப் பெரிய வனாந்திரத்தைக் கடக்க வேண்டும். அப்பெரிய வனாந்திரத்தை இதுவரை ஒருவரும் கடக்கவில்லை. முந்நூறு மைல்கள் பிரயாணம் செய்து கடந்தார். தண்ணீர் இல்லாமையால் அநேகமுறை அவதிக்குள்ளானார். ஒரு சமயம் அங்கு வாழ்ந்து வந்த மனிதன் தீக்கோழி முட்டையில் உள்ள தண்ணீரை அவருக்குக் கொடுத்துக் காப்பாற்றினான். அநேக நாட்கள் பிரயாணத்திற்குப் பின் நகாமி ஏரியை அடைந்தார் இதுவே அவருடைய முதல் புவியியல் கண்டுபிடிப்பு. இன்னும் பல நாட்கள் பிரயாணப்பட்டு ஆப்பிரிக்க இன மக்களும் போயர் என்னப்பட்ட டச்சுக்காரர்களும் வாழும் இடத்தை அடைந்தார். போயர்கள் ஆப்பிரிக்கர்களை அடிமைகளாகப் பிடித்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்தனர். இதை லிவிங்ஸ்டன் கண்டித்ததால், பல துன்பங்களுக்கு ஆளானார். ஆப்பிரிக்காவில் மத்திய பாகத்தில் அமைந்துள்ள ஜாம்பசி என்ற நதியையும் கண்டுபிடித்தார்.

ஆப்பிரிக்க நாட்டின் உட்பகுதிக்குள் செல்ல விரும்பியதால் தன் மனைவி பிள்ளைகளை இங்கிலாந்து நாட்டிற்கு அனுப்பி வைத்தார். ஆப்பிரிக்க நாட்டின் நடுப்பகுதியை கிழக்கு மேற்காகக் கடந்து செல்லத் தீர்மானித்தார். அவருடைய அன்பும், அனுதாபமும், மருத்துவச் சேவையும் பல ஆப்பிரிக்க இன மக்களை நண்பர்களாக்கிற்று. ஆப்பிரிக்கர்களை அடிமைகளாக்கித் தொழில் நடத்தும் பயங்கர நிலையைக் கண்டு பயந்தார். காடுகளின்

வழியே கொண்டு சென்று கடற்கரை நகரங்களில் அடிமைகளாக விற்று விடுவார்கள் காட்டினுள் நடந்து செல்லும் போது நோய்வாய்ப் பட்டு இறந்தவர்களை அப்படியே விட்டு விடுவார்கள். அதனால் மனித எலும்புக் கூடுகள் எங்கும் சிதறிக் கிடப்பதைக் காணலாம். இதனை "ஆப்பிரிக்காவின் ஆறாத புண்" என்று வர்ணித்துள்ளார்.



## உபத்திரவங்கள்:-

ஆப்பிரிக்க இனத்தலைவன் ஒருவன் ஒரு சமயம் லிவிங்ஸ்டனிடம் "உங்களுடைய தேசம் இந்நற்செய்தியை எங்களுக்கு ஏன் முன்னமே அறிவிக்கவில்லை? என் முன்னோர்கள் அனைவரும் சத்தியத்தை அறியாமலே மரித்துப் போனார்களே. நீர் வந்து எனக்குச் சொன்ன நற்செய்தி ஒன்றையும் அவர்கள் அறியாத நிலையில் மரித்து விட்டனரே. இது எப்படி? என்று கேட்டான். இதைக் கேட்ட லிவிங்ஸ்டன் ஆப்பிரிக்க இன மக்களைத் தேடி காட்டுப் பகுதிகளுக்குச் சென்றார் உடைகள் கிழிந்தன. கால்களில் கொப்புளங்கள் வந்தன சரீரத்தில் புண்களும் காயங்களும் ஏற்பட்டன சிலர் ஆகாரம் கொடுக்க மறுத்தனர். கிழங்குகளின் விதைகளைத் தின்று உயிர் வாழ்ந்தார். தரையில் படுத்துறங்கினார். மனக் குழப்பத்தால் மறதியும் ஏற்பட்டதுண்டு. ஆனாலும் வேதாகமத்தை அடிக்கடி வாசித்து உற்சாகத்தையும் ஆறுதலையும் அடைந்தார். தன்னுடைய நாட்குறிப்பில் "கிறிஸ்துவில் மாத்திரம் நான் ஆறுதல் அடைந்தேன் எங்கும் செல்ல ஆயத்தமாயுள்ளேன். ஆனால் அது முன்னேற்றப் பாதையாகவே இருக்க வேண்டும்" என்று எழுதினார். அவர் கொடுத்த அறைகூவல் என்னவென்றால் "அடிமை வியாபாரிகள் ஆப்பிரிக்காவைப் பிடிக்க அந்நாட்டிற்குள் பிரவேசிக்க முடியுமென்றால், கிறிஸ்துவின் அன்பினால் அனுப்பட்ட மிஷனெரிகள் கிறிஸ்துவுக்குகென்று ஆப்பிரிக்கரைப் பிடிக்க அந்நாட்டை ஊடுருவிச் செல்லாமல் இருப்பார்களோ?" என்பதே.

## லிவிங்ஸ்டன் உயர்த்தப்படுதல்:-

ஆப்பிரிக்கக் கண்டத்தின் நதிகள், ஏரிகள் இவைகளின் கண்டுபிடிப்பு அவரை புகழ்பெறச் செய்தது விக்டோரியா நீர்வீழ்ச்சியை ஓசையிடும் மேகம் என்றார். ஆப்பிரிக்கர்கள் செல்லப் பயந்த இடங்களுக்குத் தைரியமாகச் சென்றார். ஆப்பிரிக்காவின் பூகோளப் பிரதேசங்களை வெளி உலகிற்கு முதல் முறையாக அறிவித்தவர் இவர். இங்கிலாந்துக்கு சென்ற போது மிகச் சிறந்த வரவேற்பைப் பெற்றார். திரள் திரளாக மக்கள் கூட்டம் அவரைப் பார்க்கவும், அவர் சொல்வதைக் கேட்கவும் கூடினர்.

## மறுமுறை ஆப்பிரிக்க நாடு செல்லுதல்:-

அரசாங்கத்தின் பிரதிநிதியாக இங்கிலாந்து அரசு அவரை நியமித்தது. அரசு அதிகாரியாக ஆப்பிரிக்கா வந்தார். புதிய இடங்களை ஆராயவும், மிஷனெரி ஊழியம் தொடர்ந்து செய்யவும் அரசாங்கம் அனுமதியளித்தது. பல உதவியாளர்கள் தன்னுடன் இருந்தாலும், காய்ச்சலினால் அவதிப்பட்டு அவரை விட்டுப் பிரிந்து சென்றனர். தன் மனைவியும் இறந்தது அவருக்குப் பேரிழப்பாக இருந்தது. இந்தப் பெரிய இழப்பு என் இதயத்தைப் பிளந்தாலும், உலகக் கவலைகள், இழப்புகள் எதுவும் என் முன்னால் உள்ள மணியை தடைசெய்ய அனுமதிக்க மாட்டேன் என்றார்.

ஆப்பிரிக்க நாட்டில் அவருடைய உயிருக்கு எப்போதும் ஆபத்து ஏற்பட்ட வண்ணமாகவே இருந்தாலும், தேவன் அவரைப் பாதுகாத்தார் அவர் ஆரம்பித்த பணி முடியும் வரை தேவனுடைய கரம் அவரை ஆச்சரியமாய்ப் பாதுகாத்தது என்று முழங்கினார் அடிமை வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் அவருக்கு விரோதமாகச் செயல்பட்டு, பிரிட்டிஷ் அரசாங்கத்திலிருந்து வரும் சம்பளத்தை நிறுத்தி விட்டனர். அதனால் அவர் இங்கிலாந்து திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது. கர்த்தர் வெகு விரைவில் வேறு வழியில் நண்பர்கள் மூலமாய்ப் பண உதவி கிடைக்கச் செய்தார். ஆப்பிரிக்க நாடு திரும்பிய லிவிங்ஸ்டன் பின் ஒரு போதும் இங்கிலாந்து நாட்டிற்குச் செல்லவேயில்லை.

வயது சென்ற காலத்திலும் தன் பணியைத் தொடர்ந்தார். இவருக்கு வரும் கடிதங்கள் கிழிக்கப்பட்டன உடைமைகள் களவாடப்பட்டன. மருந்துகளையும் திருடிச் சென்றனர். கடிதப் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. வெளி உலகுடன் அவருக்கு இருந்த தொடர்பு நிறுத்தப்பட்டது. இவரைப் பற்றி யாருக்குமே தெரிய வாய்ப்பில்லாமல் போய்விட்டது நியூயாக் ஹெரால்ட் என்ற அமெரிக்கச் செய்தித்தாளின் ஆசிரியர் ஹென்றி ஸ்டான்லி என்ற நாஸ்திகனை அனுப்பி லிவிங்ஸ்டனை தேடச் சொன்னார். ஸ்டான்லி உணவுப் பொருட்களையும் மருந்துகளையும் கொண்டு வந்திருந்தார் அந்நாட்களில் லிவிங்ஸ்டனோடு தங்கியிருந்த ஸ்டான்லி சிறந்த விசுவாசியாக மாறி விட்டார். வசதியான வாழ்வு வாழ அமெரிக்கா செல்வதை மறுத்து விட்டார் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட தேவப்பணி முற்றுப் பெறாமல் தன்னால் எங்கும் வரமுடியாது என்று கூறிவிட்டார்.

## லிவிங்ஸ்டனின் இறுதி காலம்:-



தமது ஓய்வில்லாத பயணத்தால் பெலவீனப்பட்ட லிவிங்ஸ்டனை, அவரது ஆப்பிரிக்க நண்பர்கள் மூங்கில் கம்புகளால் கட்டப்பட்ட தொட்டிலில் வைத்து அவரைத் தூக்கிச் சென்றனர் பெரும் மழை, குளிரால் சுகவீனம் மேலும் அதிகரித்தது. அவரது நண்பர்கள் அவரை ஒரு குடிசையில் வைத்துப் பாதுகாத்தனர் உடல் நலக் குறைவால் ஜெப நிலையிலேயே அவரது உயிர் பிரிந்திருந்ததைக் கண்ட அவரது நண்பர்கள் மிகவும் கலங்கினர். கிறிஸ்துவை அறியாத எண்ணற்ற ஆத்துமாக்களுக்காகச் ஜெபித்துக் கொண்டே பரலோகம் சென்றடைந்தார். உண்மையுள்ள அவரது ஆப்பிரிக்க நண்பர்கள் அவரது இதயத்தை ஆப்பிரிக்க நாட்டின் மத்தியப் பகுதியில் புதைத்தனர். பதப்படுத்தப்பட்ட நிலையில் உடல் இங்கிலாந்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு வெஸ்ட் மினிஸ்டர் அபே என்ற இடத்தில் தேச மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டார்.

ஆயிரக்கணக்கானோர் திரண்டு இறுதி மரியாதை செலுத்தினர். அக்கூட்டத்தில் வயது சென்ற மனிதன் ஒருவன் "நானும் லிவிங்ஸ்டனும் ஒரே பள்ளியில் பயின்று, ஒரே பஞ்சாலையில் வேலை செய்தோம். நான் உலக வழியைத் தெரிந்து கொண்டேன் அவர் கடவுளின் வழியைத் தெரிந்து கொண்டு அவருடைய திருப் பணியைச் செய்ததால் நாடே புகழும்படியான பேரை பெற்றுள்ளார் என்று சாட்சி கூறினார். கர்த்தருடைய வார்த்தை இதுவே **"என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன் என்னை அசட்டை பண்ணுகிறவர்கள் கனவீனப்படுவார்கள். (1சாமு 2:30)."** கிறிஸ்துவின் பணியில் இருந்து மரித்த லிவிங்ஸ்டன் இன்று Living – Stone என்ற பெயராக மாறி காணப்படுகிறார். தேவ பிள்ளைகளே தேவ பணிக்கு உங்களை ஒப்புக் கொடுக்க ஆயத்தமா!

- சகோ. சுந்தரி.

# மருத்துவம்



**மூக்கில் இருந்து இரத்தம் வடிதல் குணமாக:-**

மாதுளம் பழச்சாறு, அருகம்புல் சாறு சம அளவு கலந்து 30மில்லி மூன்று வேளை சாப்பிட்டால் குணமாகும்.

**ஆஸ்துமா குணமாக**

வில்வ இலை பொடி தினமும் 1ஸ்பூன் சாப்பிட்டு வர ஆஸ்துமா நோய் குணமாகும்.

**வேப்பம் பூ**

கொதிக்கும் நீரில் வேப்பம் பூவை போட்டு ஆவி பிடித்தால் தலைவலி காதுவலி நீங்கும், பித்த வாதத்தை போக்கும்

**செம்பருத்தி பூ**

முடி உதிர்வதை தடுக்க இந்த செம்பருத்தி பூ பயன்படும் கண் எரிச்சல் நீங்கும்.

**காலரா குணமாக**

பாகல் இலைச் சாற்றில் ஒரு அவுன்ஸ் அளவு நல்லெண்ணெயைச் சேர்த்து குடித்து வர காய்ச்சல் நிற்கும்.

**உடல் அரிப்பு உஷ்ணம் தணிய**

ஆவானா இலைகளை அரைத்து எடுத்து அத்துடன் பாசிப் பருப்பு கால் பங்கு பூலாங் கிழங்கு அரை ரூபா அடை அளவு வைத்து மைய அரைத்து உடலில் பூசி குளித்து வந்தால் உடல் அரிப்பு நீங்கும், உடல் உஷ்ணம் குறையும்.

**பசியின்மை**

ஒரு துண்டு பப்பாளிப் பழம் அல்லது சில கொய்யா இலைக் கொழுந்துகளைத் தின்றாலும் முருங்கை கீரையைச் சமைத்து சாப்பிட்டாலும் செரியாமை நீங்கும் பசி எடுக்கும்.

**மாரடைப்பு குணமாக**

சீரகம் 20கி, அருகம் புல் துளசி இலை முற்றிய வேப்பிலை, வில்வ இலை ஆகியவை ஒவ்வொன்றும் 100கிராம் வெந்தயத்தூள் 200 ஆகியவை தேவை எல்லாவற்றையும் தூள் செய்து நன்றாகக் கலக்கி வைக்க வேண்டும்.

**வாயுத்தொல்லை**

சுக்கு கஷாயத்தில் செந்துளசி சாற்றை கலந்து உட்கொண்டால் எல்லாவிதமான வாயுத் தொல்லை அகலும்.

**நரம்பு தளர்ச்சி குணமாக**

நெய்யில் வெள்ளை வெங்காயத்தை வதக்கி சாப்பிட்டு வர நரம்பு தளர்ச்சி குணமாகும்.

# THE POWER OF BLESSING

## Matthew 6:33 But seek ye first the kingdom of God, and His righteousness, and all these things shall be added unto you.

In the beginning, when God made the man, man lived in the kingdom of God system. During that time there was only one kind of system or you can call it the order of living or rules in heaven and on earth which was the kingdom of Gods system until the man sinned. And when man sinned he could no longer live in the kingdom of God system. He was out of the kingdom of God, and its system. Then the man was lonely on the earth with no boundaries or rules or don't know what to do. He wandered without purpose. Slowly as the time passed man built for himself a system with years of thinking over failures and changing it and became the king of that kingdom. He kept on trying and changing the living order rules and guidelines and built for himself a kingdom with the is own ideas and experiments without God, which are about not successful even now such as the educational system, family system, law and order, technology…etc. In this period of time, Satan was planning behind this system to control and dominate man's will. God was also planning to bring salvation, to man to restore all as in the beginning through man. He will make it a new heaven and a new earth. That's why Jesus taught his disciples to pray in **Matt 6:10 Thy kingdom come**. They the will be done on earth as it is in heaven that means as it was before in Gods system that's his rule and his will. When we are saved we are moving out of this man's worldly kingdom which is a Babylonian system of Education, Finance, the Banking system, IT jobs…etc. into the kingdom of His dear son. Col1:13.

**Genesis 1:28 And God blessed them, and God said unto them, Be fruitful, and multiply, and replenish the earth, and subdue it: and have dominion over the fish of the sea, and over the fowl of the air, and over every living thing that moveth upon the earth,** in God's system there was no working, no education system. He gave everything for food and no need to work for it but you might say in **Genesis 2:15And the Lord God took the man and put him into the garden of Eden to dress it and to keep it**. In fact, Adam was to speak to move mountains, trees to set in order and dress it the way he liked it by speaking to it. That's why Jesus said if you have faith you can speak to the mountains and move it where you want the mountains to be, plants and flowers to be, where it looked beautiful in a 7 dimension view. As Adam did in the kingdom of God system, but now how we do planting is with our hands sweating working in the gardens and fields ,and then we see some fruits and flowers, instead of speaking and creating it, Even now when we come back into the kingdom of God and its system through Jesus Christ we can do it by speaking and creating in Jesus' name because it is in Jesus' name that we are in the kingdom of God. Now a thought may arise on what the apostle Paul said in **2 Thessalonians 3:10 … this we commanded you, that if any would not work, neither should he eat.** It was for a reason that he said that in the Holy Spirit. Working started when man sinned and among 5 curses one of the curses is you will labour and from your sweat, you will eat bread.

GENESIS 3:19 in the of thy face shalt thou eat bread…….) If you think work is a must then the curse of labour is not paid for on the cross for you, even if you think evangelism is work or ministering is work, working is curse because ministering to the Lord is serving the Lord freely by his grace and gifts, and all things will be added unto you . now that doesn't mean it will fall from the sky, God is able to make it fall from sky He did it for the children of Israel, and Jesus feeds 5000, but here he will add



all that you need in abundance through his obedient children. Jesus paid on the cross for the curse of labour. In that case, another question arises then why are you working for bread when it should have been provided. Yes, I know what you are all thinking now as you read this even I am aware of all those facts but you need to answer this question either way. There are so many living in the kingdom of God's supply as Adam and Jesus did, oh! you might say Jesus was the son of God well then who are you? Why-why-why am I still sweating for bread worrying about the jobs and salary and what you get is not enough because you are still tilling and by sweat eating the bread? When Jesus was on earth he demonstrated how it's going to be in the kingdom of God when he fed the five thousand and another time a four thousand. And he told don't labour for the meat that perishes but come into the kingdom of God and all these things will be added unto you.

We can find answers to this question when we get a revelation of the difference between sin and curses; how our Lord and saviour Jesus Christ paid for it all for us on the cross. Otherwise, it will remain an unanswered question in us and to cover it up we might say oh! I just believed it and put my faith in for the full payment. Once I met a person whom I shared this and after a long time of going through the bible he came up with an answer saying I think that's one curse operating now which is not paid on the cross and it will be done when we all arrive in heaven. But Jesus said Thy kingdom come Thy will be done on earth as it is in heaven and also Jesus said the kingdom of God is within you. Here you might think about whether it is possible to live a life without labouring, working and sweating. Yes, it is possible that the world's system as already adapted it, called pension. If you didn't understand then you might think this is an heresy or a wrong doctrine but if you know the truth the truth will set you free **John 8:32 And ye shall know the truth, and the truth shall make you free.** Some who were delivered from this curse are managers of the company and some are owners. They are not in that position for bread or to meet their needs but they are there because God wanted them to be there and they walk in grace no worry no labour or sweat. Only believing for their promotion comes from the Lord and not from their salary. Halleluyah! GOD BLESS YOU.

*- Pastor. Benedict Joseph*

# யோசபாத்
## (கர்த்தரின் தீர்ப்பு)

**காலம் : கி.மு 914 தகப்பன் பெயர் : ஆசா ராஜா தாயின் பெயர் : அசுபாள்**

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபின் நாலாம் வருஷத்தில் யோசபாத் யூதாவின் மேல் ராஜாவானான். முப்பத்தைந்து வயதில் ராஜாவாகி, இருபத்தைந்து வருஷம் எருசலேமில் ராஜ்யபாரம் பண்ணினான். யூதா ராஜாக்களில் அதிக பயபக்தியும், அநுகூலமுமுள்ளவன். இவனுடைய காலத்தில் யூதாவுக்கும், இஸ்ரவேலுக்கும் சமாதானமிருந்தது. இவன் சிவந்த சமுத்திரக்கரையில் ஒரு துறைமுகம் ஏற்படுத்தி, மறு தேசங்களோடு வியாபாரஞ் செய்தான். பொன்னுக்காக ஓப்பீருக்குப் போகும்படி யோசபாத் தர்ஷீஸ் கப்பல்களைச் செய்தான். ஆனால் அவைகள் போகாமல், எசியோன் கேபேரிலே உடைந்துபோயின.

இவன் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதைச் செய்தான். அவன் யூதாவின் அரணான பட்டணங்களிலெல்லாம் இராணுவத்தையும், தாணையங்களையும் வைத்தான். கர்த்தர் யோசபாத்தோடு இருந்தார். இவன் கர்த்தருடைய கற்பனைகளின்படி நடந்தான். ஆகையினால், கர்த்தர் அவன் கையில் ராஜ்யபாரத்தைத் திடப்படுத்தினார். யூதா கோத்திரத்தார் எல்லாரும் யோசபாத்துக்கு காணிக்கைகளைக் கொண்டு வந்தார்கள். அவனுக்கு ஐசுவரியமும் கனமும் மிகுதியாயிருந்தது.

கர்த்தருடைய வழிகளில் அவன் இருதயம் உற்சாகங் கொண்டது. மேடைகளையும், விக்கிரகத் தோப்புகளையும் யூதாவை விட்டகற்றினான். யூதாவில் உபதேசிக்கிறதற்கு பிரபுக்களையும், லேவியரையும் அனுப்பினான். அவர்கள் கர்த்தருடைய வேத புஸ்தகத்தை வைத்துக் கொண்டு, யூதாவின் பட்டணங்களிலெல்லாம் திரிந்து ஜனங்களுக்கு போதிதார்கள்.

யோசபாத் வரவர மிகவும் பெரியவனானான். கர்த்தருடைய நியாயங்களை குறித்தும், விவாதவிஷயங்களைக் குறித்தும் விசாரிக்க லேவியரிலும், ஆசாரியரிலும், இஸ்ரவேல் வம்சத்தலைவரிலும் சிலரை நியமித்திருந்தான். ஆனாலும், இவன் ஆகாபோடு உடன்படிக்கை செய்து, யுத்தத்திற்கு போன போது கண்டிக்கப்பட்டான். மோவாபியரும், அம்மோன் புத்திரரும் இவனுக்கு விரோமாக யுத்தத்திற்கு வந்தபோது, யோசபாத் பயந்து கர்த்தரை



தேடுகிறதற்கு ஒருமுகப்பட்டு யூதாவெங்கும் உபவாசத்தை கூறுவித்தான். கர்த்தரை துதிக்க பாடகரை ஏற்படுத்தினான். யுத்தத்தில் ஜெயம் பெற்றவுடன், கர்த்தரை துதித்து ஸ்தோத்திரம் செலுத்தினார்கள். அவ்விடம் பெராக்கா என்று அழைக்கப்பட்டது.

யுத்தமில்லாத இளைப்பாறுதலை கர்த்தர் யோசபாத்துக்கு கட்டளையிட்டதினால், யோசபாத்தின் ராஜ்யபாரம் அமரிக்கையாயிருந்தது.

நாமும் நம் வாழ்க்கையில் கர்த்தரை பின்பற்றி, அவர் வழிகளில் நடந்து, துதித்து பாடி எல்லாவற்றிலும் அவரை முதன்மையாக நிறுத்தி ஜெயமான வாழ்க்கை வாழ கர்த்தார் நமக்கு கிருபை தருவாராக.

**வசன இருப்பிடம்**

| | |
|---|---|
| I இராஜாக்கள் 15 : 24 | II நாளாகமம் 17 : 3,6,9 |
| II நாளாகமம் 19 : 8 | II நாளாகமம் 20 : 4,21,30 |

# Jesus Redeems You



According to the dictionary, the word Redeem means a lot, one of the meanings say "to obtain the release or restoration of, as from captivity, by paying a ransom". This is like freeing an individual subject to the cruel power, authority and totally clasped. It is more of a slave who has no right or resource to deliver themselves.

If anybody wants them to be freed from the clasp, they have to pay or replace something equal to redeem that person. So mostly there would be none to pay or replace them by giving themselves in their place. And so many who live in bondage tend to believe bondage is their destiny and redemption is next to impossible.

Amidst these, there is hope that many will be redeemed. All of them who had been redeemed would probably say, that it looked impossible and unimaginable that I am redeemed. When our problem is big, then the redemption looks unrealistic. I would like to narrate an incident that happened in Thailand. There was a teenage football team in Thailand gotta rapped in a cave in their exploration of caves. Being a monsoon season, when they were exploring the deep caves, all the nearby caves around, them got filled and were surrounded by water, trapping them without a way out. Young boys of 11 - 16 years were trapped for about 2 weeks. They had lost their hope of being rescued.

On the other side of the cave, the whole world was anxiously waiting to know the whereabouts of the children. The rescue operations were led by the Thai government. They deployed their well-trained armed forces and infrastructure for the rescue.

International cave divers were invited to take forward the rescue operation. Satellite images were used to track the cave path and so on. Local people came in hundreds and thousands to help the rescue team in the Chaing Rai district in Northern Thailand. Even a rescuer died during the operation. The rescue operations became unimaginably big and unrealistic. The children knew how badly they were trapped. They had lost their belief of being redeemed from the cave. The question of living became unrealistic to them and to the world after two weeks. But after much efforts, the rescue team reached them after traveling a few kilometers in the narrow cave path and in waters. These kids couldn't believe their eyes of seeing a rescuer. And in the following days, they were rescued and celebrated by the whole world. These kids in the press meet had said, we never believed of being rescued and couldn't believe our eyes when we saw the rescue team.

Yes, the rescue had not been an easy work even when the whole world came together to their rescue. But who would redeem us from the problems that we are facing? Who would pay the ransom for redemption? Will this whole world come to rescue us? No. So what is the hope for all our life's trouble? What is the future for all of us? Who would rescue and pay the ransom for us?

We are all bound in many areas of life. Crying who would rescue me? Many of them are living a life that is more of a hell. Surmounted with fear, failure, loss, sickness, poverty and evil habits which are defeating them every day and in every step. There are stories in families which would break our hearts. Many families who show themselves very happy and perfect to the world are in deep grief inside their house. All their cry is who would pay the ransom to deliver us. Who would come to us to redeem us? The difficulty here is, there are some who can't even run hither and dither to find the redeemer. They can't find and can't go? Who would redeem them?

## Redemption by Jesus Christ

To all the questions, Isaiah 54: 5 says, "*For your Creator will be your husband; the LORD of Heaven's Armies is his name!* ***He is your Redeemer****, the Holy One of Israel, the God of all the earth* ". There had never been any god who had said that I would redeem you by giving myself as the ransom. Indeed, the Almighty God, the God of all the earth, the Lord Jesus Christ alone was ready and gave himself as a payment for our redemption for all the people of the earth. Here, the Highest and Most Perfect and Holy God came down from all His glory to lift us up from the evil of this world. Jesus redeems us from all the sin, curse, evil habits and sickness.

Redemption was purchased by a huge payment of laying down of His life on the cross. Because of His sacrifice on the cross, we are redeemed to an abundant life. "*The thief comes only to steal and kill and destroy; I have come that they may have life, and have it to the full. I am the good shepherd. The good shepherd lays down his life for the sheep*." - John 10: 10&11. That abundant life was restored by the payment of laying down HIS life on the cross. Jesus knows we are broken and weak. So He out of love stepped into the world as the Savior and Redeemer. How much joy it is to know that, we can be out of this problem

through Jesus. Yes, Jesus has come to give the joy, peace, and holiness which we have traded to satan.

Jesus says in John 15;16 "*You did not choose me, but I chose you and appointed you so that you might go and bear fruit-fruit that will last*". Redemption through Jesus is not our effort but the work of Trinity. Because He has known us and loved us well before we know Him, He had voluntarily approached us out of love to redeem us into the magnificent light. It is not our effort but it was a complete effort the by the Lord. In many places, the bible says, that the Lord approached them to redeem them.  To enumerate few of them:

- Jesus took a boat to Galilee but stopped by the way and healed a demon-possessed man at the tomb, but He had no other work there except the redemption of this madman (Luke 8: 26 - 39)

- Jesus went to the Pool of Bethesda, just to redeem a man with an infirmity for thirty-eight years. He did not invite Jesus to deliver him, instead, it was an effort of Jesus to meet him. ( John 5: 1-15)

- Jesus while teaching in the synagogue called a woman with eighteen years of crippled spirit and healed her ( Luke 13: 10 - 17



Jesus went around healing and delivering people. It was He who took efforts to deliver the people. Matthew 9:35 says, "*Jesus went through all the towns and villages, teaching in their synagogues, proclaiming the good news of the kingdom and healing every disease and sickness.*" It is not our effort, our redemption is an eternal plan by the grace of the Lord. The following verse says that "*When he (Jesus) saw the crowds, he had compassion on them, because they were harassed and helpless, like sheep without a shepherd*" (Matthew 9;36). So do not worry, you have Jesus who would visit you with compassion at the right time and redeem you from all the bondage.

Yes, many of us are like the crowd who are harassed and helpless. No one to redeem or have compassion for them. Jesus saw them with much compassion not because they called Him Lord, Lord, but, it was His love and compassion towards suffering people. Every time, Jesus was out on the streets, He was filled with love and compassion towards the dying people and He redeemed them from sickness, poverty, death, and sin.

## Today is your Day of Redemption

Psalmist advises the people of Israel to keep their hope in the Lord since in Him alone is complete deliverance. Psalms 130: 7 *"Israel, put your hope in the LORD, for with the LORD is unfailing love and with him is full redemption".* Whatever be the situation today in your life,

just turn your belief toward the Living God, who would deliver you without any change in His words. We are the testimony of God's redemption.

When I was young and going to primary school, our family faced problems due to witchcraft. We faced many difficulties which are indescribable. We lost our sources of income, were suffering for food. There was always fighting and sorrow in our house. It was just a house without living in it. We all hated each other. It was the life of complete chaos and hopeless situation. We at times thought everything is over. There was nothing that we may cling on to.


As a young boy whenever a pastor or people in the ministry come to pray in our house, I believed from that day onwards, all will be fine and well. Unfortunately, the blessing of joy, peace, and love didn't lose longer and we were back to square one. But our Lord didn't disappoint us. Though it got delayed, the Lord did not fail to redeem us. I can say today by the grace of the Lord, we are redeemed and blessed many thousand folds. It is not the story of us, it is the revelation of the God who keeps His promise of redemption to his faithful children. Job, a man of God mentioned in the Bible, was in dire distress and had nothing to live. He firmly believed that the Lord is capable of restoring anything and everything that was plundered by satan. Because he firmly believed, He stated that His redeemer lives. *"I know that my Redeemer lives and that in the end, he will stand on the earth"*(Job 19:25). Yes, as Job believed, the Lord returned to Job in double fold. Like Job and other saints of the Bible, He wants you to believe in Jesus Christ and redemption through Jesus Christ.

Today, you might be clasped in the suffering of a broken relationship or dealing with a prodigal child or deadly disease or drowned in debt and poverty or possessed and tormented by the evil spirit. Believe like Job that I have Jesus Christ, the Son of God who is changing my life today from sorrows to Joy, from bondage to Freedom, from sickness to Health and raising me from poverty to Prosperity. Those who believed in Jesus were never in despair. We believed HIM and weren't in despair and also the people who believed in Him, so shall you be.

May we say with the Psalmist (Ps 103:1,4),

**Praise the Lord, my soul; all my inmost being, praise his holy name.**
**who redeems your life from the pit and crowns you with love and compassion**

*- Bro. Densingh Joshua Israel*






# எச்சரிப்பு

அன்பான சகோதர சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் நல்வாழ்த்துதல்கள். 'எச்சரிக்கை' என்று சிகப்பு நிறத்தில் எழுதப்பட்ட வாசகங்களை அநேக இடத்தில் பார்த்திருப்பீர்கள். பெரிய கட்டிடங்களில் தீயணைப்பு எச்சரிப்பு காவல் துறையின் எச்சரிப்பு மின் கம்பங்களில் எச்சரிப்பு என பல இடங்களில் நம்முடைய பாதுகாப்பிற்காகவே எச்சரிக்கை பலகைகள் நிறுவப்பட்டுள்ளன. ஒரு வேளை அவைகளை நாம் அசட்டைசெய்தால் பிரச்சனைகளையும், இழப்புகளையும் அநுபவிப்போம். இதைப்போலவே, கிறிஸ்துவை பின்பற்றுகிறவராய் நீங்கள் இருந்தால், வேதம் அநேக எச்சிரிப்புகளை கொடுப்பதை கேட்டிருப்பீர்கள். இவைகள் நம்மீது தேவன் கொண்டுள்ள அன்பினிமித்தமாகவே கொடுக்கப்படுகிறது – "ஒருவன் தன் புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிட்சிக்கிறார்" (உபா 8:5) என்கிறது வேதம் நீங்கள் கடவுளால் ஏதாவது எச்சரிக்கப்பட்டிருந்தால் அதை மிக இலகுவாக எடுத்துக் கொள்ளாமல் அதனால் ஏற்படும் பாதிப்புக்களை உணர்ந்தவர்களாய் அவைகளை திருத்திக்கொள்ள முற்பட வேண்டும். ஒரு வேளை அசட்டுத்தனமாகவோ கண்டும் காணாதது போலவும் உங்கள் வாழ்க்கையை தொடர்வீர்களானால், நித்திய வாழ்வை இழக்கும் நிலை ஏற்படும். எப்படிப்பட்ட எச்சரிப்புகள் கொடுக்கப்படுகின்றன, அதை அசட்டை செய்தால் ஏற்படும் விளைவுகள் என்ன, எப்படி நம்மை சீர்செய்து பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வது என்பதை பற்றி சற்று விளக்கமாக வேதத்தின் அடிப்படையில் தியானிப்போம்.

வார்த்தையில் எச்சரிக்கையாயிரு

இப்படியாக ஒரு உரையாடல் பேதுருவுக்கும் இயேசு கிறிஸ்துவுக்கும் இடையே நடைபெறுகிறது.

இயேசு: எருசலேமில் பாடுகள்பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருப்பதை பற்றி சீடர்களிடம் கூறுகிறார். (பேதுரு தீடீரென்று அவரை தனியே அழைத்துப் போகிறார், இயேசுவை கடிந்து கொள்கிறார்)

பேதுரு: ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே. இது உமக்குச் சம்பவிப்பதில்லை

இயேசு: எனக்குப் பின்னாகப்போ சாத்தானே. நீ எனக்கு இடறலாயிருக்கிறாய். தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் (மத் 16:21-23) பாருங்கள், இங்கு பேதுரு ஒரு கெட்ட வார்த்தையும் உபயோகிக்கவில்லை, பாவத்துக்கு ஏதுவான பொய்யோ புறங்கூறுவதோ இல்லை. ஆனால் இயேசு 'சாத்தானே' என்று அவரை கடிந்து கொள்கிறார். தேவனுடைய சித்தத்திற்கேற்ற காரியங்களை பேதுரு பேசாததால் அவர் இவ்வளவாய் கடிந்துகொள்ளப்பட்டார் என்றால், ஒருவேளை பாவமான வார்த்தைகள் அவர் வாயிலிருந்து வந்திருக்குமானால், அவர் நிலைமை என்ன என்று யோசிக்கலாம்! நீங்களும்

நானும் இன்று பலவிதமான பாவத்திக்குரிய வார்த்தைகளையும், தூஷணங்களையும், மற்றவர்களை துக்கப்படுத்தும் வார்த்தைகளையும், பிரயோஜனமற்ற வார்த்தைகளையும், தேவனுடைய சித்தத்தின்படியும் இல்லாத வார்த்தைகளை பேசுபவர்களானால், தேவனுடைய எச்சரிப்பு நமக்கு நேராக வருகிறது. "தன் உதடுதளை விரிவாய்த் திறக்கிறவனோ கலக்கமடைவான்" (நீதி 13:3). ஆம்! நம்முடைய நித்திய வாழ்வை இழக்கச் செய்யும் அளவிற்கு நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் வல்லமையுள்ளவைகளாய் இருப்பதால், மிகவும் கவனத்தோடு, நம் ஆத்துமாவை நாம் பாதுகாத்துக் கொள்ளும்படியாய் நிதானித்து பேசவேண்டும். நாம் பேசும் வார்த்தைகள் **"பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள் (எபேசியர் 4:29)** என்ற ஆலோசனையின் படி பேச தீர்மானம் செய்வோம். இதன்மூலம் தேவனுக்குப் பிரியமுள்ளவர்களாய் மாறுவது மட்டுமல்லாது, நித்தியமாய் நம் ஆத்துமாவும் பாதுகாக்கப்படும். அலலது வார்த்தைகளை சரளமாய் பேசி எச்சரிப்பை அலட்சியம் செய்தால் இம்மையில் நீங்காத கஷ்டங்களும் மறுமையில், நித்திய நரகத்தையும் தவிர வேறு எதுவும் உங்களுக்கு கிடைக்காது.

## கிரியைகளில் எச்சரிக்கையாயிரு



இப்படியாக ஒரு சம்பவம் நடக்கிறது. சவுலை இராஜாவாக அபிஷேகம் செய்தார். சாமுவேல் தீர்க்கதரிசி **"பொல்லாப்பை செய்யவே செய்வீர்களானால், நீங்களும் உங்கள் ராஜாவும் நாசமடைவீர்கள்" என்று எச்சரித்திருந்தார்.** (சாமு 12:25) பெலிஸ்தியரோடு நடக்கும் போரில், பெலிஸ்தியர் அதிகமாகி இருந்ததால் பயத்தோடு கில்காலில் சவுலும், இஸ்ரவேலரும் இருந்தனர்.

சாமுவேல் : ஏழு நாட்கள் நான் வரும் வரை காத்திரு

சவுல் : நாட்களாயிற்று, சாமுவேல் வரவில்லை, இஸ்ரவேலர் சிதறுகிறார்கள். இனி காத்திருக்க முடியாது (இப்படி சொல்லி சாமுவேல் தீர்க்கர் செலுத்த வேண்டிய பலியை சவுலே செலுத்தி முடித்தார். பலி செலுத்தி முடியும் நேரத்தில் சாமுவேல் தீர்க்கர் அங்கு வருகிறார்)

சாமுவேல் : நீர் செய்தது என்ன?
சவுல் : பெலிஸ்தியர் நெருக்கியதால், இஸ்ரவேலர் சிதறியதால், கடவுளிடம் இச்சூழ்நிலையில் விண்ணப்பம் ஏறெடுக்கப்படாததால் சர்வாங்க பலி செலுத்தினேன்.
சாமுவேல் : புத்தியீனமாய்ச் செய்தீர். உம்முடைய தேவனாகிய கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையைக் கைக்கொள்ளாமற் போனீர். உம்முடைய ராஜ்யபாரம் நிலை நிற்காது. (1சாமு 13)

பாருங்கள், தேவன் கொடுத்த பொறுப்பை செய்யாமல், கொடுக்காத உரிமைகளை எடுத்து தன் சுய ஞானத்தின்படி சிந்தித்து, கொடுக்கப்பட்ட கட்டளைகளை அலட்சியம் செய்து பெரும் இழப்பை சந்தித்தார் சவுல் ராஜா இரண்டே ஆண்டுகளில், இஸ்ரவேலரின் ராஜாவாக இருப்பதிலிருந்து தள்ளப்பட்ட பரிதாபமான நிலைக்குள்ளானார் அன்பானவர்களே, தேவன் நம் ஒவ்வொருக்கும் பொறுப்புகளையும், அதை எப்படி செய்ய வேண்டுமென்று வழிமுறைகளையும், கட்டளைகளையும் கொடுக்கிறார். வேத வசனங்களின் மூலமாகவோ, பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலினாலோ, பிரசங்கள்களின் மூலமோ, தீர்க்கதரிசங்கள் மூலமாகவோ அவர் நமக்கு போதிக்கிறார். கருத்தாய் அவைகளை மனதில் வைத்து, உணர்வோடு அவர் கட்டளைகளுக்கு கீழ்படிபவர்களுக்கு ஆசீர்வாதத்தையும், கீழ்படியாமல், அசட்டையாய் வாழ்பவர்களுக்கு சாபத்தையும் கொடுக்கிறார். **"நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும் படிக்கு அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்"...... "அவர் சத்தத்திற்குச் செவிகொடாதேபோவாயாகில், இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன் மேல் வந்து, உனக்குப் பலிக்கும்"**( உபா28:1,15). வேதத்தின்படி வாழாமல், உலகம் காண்பிக்கும் வழியில் நடப்பவர்களாக இருப்பீர்களானால், சற்று சிந்தியுங்கள். உடனடியான உலக மகிழ்ச்சிக்காக தேவனிடமிருந்து வரும் சந்தோஷத்தையும், ஆசீர்வாதத்தையும் இழக்கப்போகிறீர்களா? அல்லது தேவன் உங்களுக்கு கொடுத்திருக்கும் எச்சரிப்பை குறித்து தேவனுக்குப் பயந்து உங்கள் வழிகளை சீர்படுத்தப்போகிறீர்களா?

எச்சரிப்பையெல்லாம் அசட்டை செய்து அலங்கோலமான, குழப்பமான வாழ்வை வாழ்வீர்களானால், இன்று நீங்கள் மனந்திரும்ப ஒரு வாய்ப்புண்டு. எச்சரிப்பை ஏற்று உங்கள் வாயின் வார்த்தைகளையும், வாழ்க்கையின் நடைமுறைகளையும் மாற்றிக் கொள்ள விரும்புவீர்களானால், உங்களை நல்வழியில் நடக்க உதவும் ஒரு கடவுள் உங்களுக்கு உண்டு என்பதை அறியுங்கள். நம் மாம்ச பெலவீனத்தினால் வீழ்ந்து போனாலும், அவர் எச்சரிப்புகளைக் குறித்த பயமும், அவர் விருப்பப்படி வாழ விருப்பமும் இருக்குமானால், தேவன் நம்மை கவனித்து, நம்மை மன்னித்து, நம்மை பெலப்படுத்தி, நம்மை ஆசீர்வதிப்பார். அப்படியிராமல் உங்கள் வசதிப்படி நீங்கள் விரும்பியவைகளை செய்து தேவ வார்த்தையின்படி வாழாவிட்டால் நிச்சயமாய் நித்திய நரகம் மட்டுமே உங்களுக்கு உண்டு என்பதையும் அறியுங்கள். இன்றே உங்கள் பொல்லாத நினைவுகளை விட்டு இயேசுவிடம் திரும்பி, அவர் விரும்பியபடி வாழுங்கள். இயேசுவின் அன்பை அலட்சியம் செய்யாதீர்கள்.

## எச்சரிப்பு

**"நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்து கொண்டு, சிட்சிக்கிறேன். ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு" (வெளி 3:19)**

- சகோதரி.லிண்டா ராஜாசிங்



# வேத வாசிப்பு பகுதி

## அக்டோபர் மாத வேத வாசிப்பு பகுதி

தேதியும் அதிகாரங்களும்

| நாள் | வாசிக்க வேண்டிய வேதப் பகுதி | நாள் | வாசிக்க வேண்டிய வேதப்பகுதி |
|---|---|---|---|
| 1 | லூக்கா 18-21 | 17 | அப்போஸ்தலர் 23-25 |
| 2 | லூக்கா 22-24 | 18 | அப்போஸ்தலர் 26-28 |
| 3 | யோவான் 1-3 | 19 | ரோமர் 1-4 |
| 4 | யோவான் 4-6 | 20 | ரோமர் 5-8 |
| 5 | யோவான் 7-10 | 21 | ரோமர் 9-11 |
| 6 | யோவான் 11-13 | 22 | ரோமர் 12-16 |
| 7 | யோவான் 14-17 | 23 | I கொரிந்தியர் 1-4 |
| 8 | யோவான் 18-21 | 24 | I கொரிந்தியர் 5-8 |
| 9 | அப்போஸ்தலர்1-2 | 25 | I கொரிந்தியர் 9-12 |
| 10 | அப்போஸ்தலர் 3-5 | 26 | I கொரிந்தியர் 13-16 |
| 11 | அப்போஸ்தலர் 6-9 | 27 | II கொரிந்தியர் 1-3 |
| 12 | அப்போஸ்தலர் 10-12 | 28 | II கொரிந்தியர் 4-6 |
| 13 | அப்போஸ்தலர் 13-14 | 29 | II கொரிந்தியர் 7-9 |
| 14 | அப்போஸ்தலர் 15-18 | 30 | II கொரிந்தியர் 10-13 |
| 15 | அப்போஸ்தலர் 19-20 | 31 | கலாத்தியர் 1-3 |
| 16 | அப்போஸ்தலர் 21-22 | | |

## வேத வினாக்கள்

1. நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து யார் யாரிடம் கூறியது?
2. கெங்கிரேயா சபை ஊழியக்காரியின் பெயர் என்ன?
3. கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், மிகுந்த உதாரத்துவமாய் கொடுத்த சபை எது ?
4. நீ குணப்படும் படி உன்னை ஏவுவது உது?
5. பிலாத்து சிலுவையில் போடுவித்த, மேல் விலாசத்தில் எழுதப்பட்டது என்ன ?
6. 'அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கடவன்' வசன இருப்பிடம் தரவும்.
7. யூதருக்கு தயவு செய்ய மனதாய் பவுலை காவலில் வைத்து விட்டு போனவன் யார்?
8. எட்டு வருஷமாய் கட்டிலின் மேல் திமிர்வாதமுள்ளவனாய்க் கிடந்தவன் யார்?
9. நம்மை அபிஷேகம்பண்ணின தேவன் நம்முடைய இருதயங்களில் எதைக் கொடுத்திருக்கிறார்?
10. யார் இரட்சிக்கப்படுவான் என்று ரோமரில் கூறப்பட்டுள்ளன?





# ஆலய பிரதிஷ்டை ஆண்டு விழா

23.09.2018











RNI No. TNTAM/2914/60710





# ஆலய பிரதிஷ்டை ஆண்டு விழா

23.09.2018





## Athma Nesar Prayer Fellowship

**Worship Timing - Sunday at 9.30 a.m.**

Address 7/160, Agaram Main Road, Agaram Then, Chennai - 600 126.

Contact: +91 44 2229 4058 / 94440 30053 / 94440 30503







**Owned and Published by Rev. V. ISRAEL DEVADASAN**

Printed by : R. Venkatesan at ANBU OFFSET PRINTERS, No.22/12, South Mada Street, Chinna Kancheepuram - 631 501 and Published from No.2-106, Agaram Main Road, Agaram Then, Mappedu Post, Selaiyur, Chennai - 600 073

Editor: Rev. v. Israel Devadasan